இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

20 . 12 . 2009



# பாதுகாவலன்

## கிறிஸ்மஸ் சிறப்பு மலர்

மலர்: 133
இதழ்: 24
விலை: 25/=

## யாழ் ஆயரின் நத்தார் செய்தி



### துன்புறும் மக்களின் துயர்துடைக்கும் கிறிஸ்மஸ் ஆகட்டும்

நத்தார் விழாவானது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து மானிட மீட்புக்காகக் குழந்தையாகப் பிறந்ததை நினைவுபடுத்துகின்ற நாளாகும். "இருளின் அந்தகாரத்திலும், மரணநிழலிலும் வாழும் மக்கள் ஒளியை காண்பார்கள்" என இறைவாக்கினர் உரைத்தனர். எனவே இருள் அகற்றி, உலகிற்கு ஒளி தரும் வார்த்தையாகிய பாலகன் இயேசுவின் பிறப்பு விழா நல்லுள்ளம் கொண்ட அனைவர்க்கும் அமைதி அளிக்கும் விழாவாக உள்ளது.

30 வருட கொடிய போரின் பின் யுத்த கருவிகள் ஓய்ந்து அமைதி நிலவும் இக்காலத்தில், நத்தார் பெருவிழாவை கொண்டாடுகின்றோம். துன்பியல் தரும் கொடிய போர் ஓய்ந்து அமைதி நிலவும் இத்தருணத்திற்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

போரின் விளைவாக நடந்த பிரச்சனைகள் இன்னும் முழுவதும் தீர்க்கப்படவில்லை. இடம் பெயர்ந்த மக்களின் அவல நிலை இன்னும் முடியவில்லை அவர்கள் தம் இல்லங்களுக்கும் நில புலங்களுக்கும் திரும்பி நாளாந்த வாழ்வை மேற்கொள்ளும் போது தான் அவர்கள் நிம்மதி அடைவார்கள்.

நாளாந்தம் அசுரவேகத்தில் ஏறிவரும் விலை வாசிகளும் அதனால் ஏற்படும் சிரமங்களும், பரந்து நிற்கும் வறுமையும், வாழ்வதற்குத் தகுந்த இல்லிடமற்ற நிலமையும், வேலை வாய்ப்பு இன்றியநிலையும் இன்று மக்களை வாட்டி நிற்கின்றன. இவற்றிற்கு நிரந்தர தீர்வு காண்பது அரசினுடையவும், ஏனைய உதவி நிறுவனங்களினதும் கடமையாகும்.

எனவே இருளகற்றி ஒளியேற்றப் பிறந்த பாலன் இயேசுவின் நத்தார் பெருவிழா, துன்புறும் மக்களின் துயர் துடைத்து, அனைத்து மக்களையும் சகோதரர்களாக ஏற்று வாழ அர்ப்பணிப்புடன் உழைப்போம். மீட்புக்காக மனிதனாய்ப் பிறந்த ஆண்டவர் இயேசுவின் ஆசீரை காவலன் வாசகர் அனைவர்க்கும் காவலன் பணியாளர்கட்கும் தெரிவித்து, எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**பேரருட்திரு இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**
**யாழ் ஆயர்.**

பனி படர்ந்த பெத்லேகேமில்
கடவுளின் மனித துளி
ஒளியாகப் பிறந்த
அதிசயம்
உனது மனிதத்தில்
உயிர்க்கட்டுமே






கூடுகள் இழந்து
குவிந்த சுமைகளோடு
எங்கேசெல்லும்
இந்தப் பயணம்?
குளிரில் பிறந்தவர்
அடைக்கலம் தருவார் என்னும்
நம்பிக்கையுடன்.

## நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து பிறப்பு விழா – சில வரலாற்றுப்பதிவுகள்

### கிறிஸ்து உலக வரலாற்று நாயகன

டிசம்பர் 25ம் திகதியை உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் மிகச் சிறப்பாகக் (கிறிஸ்மஸ்) கொண்டாடி வருகின்றனர். பல நாடுகளில் கிறிஸ்தவர்களல்லாதவர்களும் இவ்விழாவைப் பல்வேறு ஆடம்பரங்களுடன் கொண்டாடுவதைப் பார்க்கலாம். இந்நாடுகளில் மக்கள் மத வேறுபாடின்றி வழமையிலும் பார்க்கக் கூடுதலாக ஆடை அலங்காரங்கள் உணவு வகைகள், பொழுதுபோக்கு விளையாட்டுப் பொருட்கள் போன்ற பொருட்களை வாங்குவதையும் பல்வேறு மகிழ்ச்சி ஆரவாரங்களுக்குச் செலவு செய்வதையும், உறவினரையும் நண்பர்களைச் சந்திப்பதில் ஈடுபடுவதையும் காணலாம். இவையெல்லாவற்றுக்கும் காரணமில்லாமலில்லை.

கிறிஸ்தவர்கள் தமது மீட்பரின் இவ்வுலக வருகை என்ற வரலாற்று நிகழ்வை மனுவுருவாய் பிறந்ததனைக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமே. கிறிஸ்துவின் பிறப்பு கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்கும் ஏன் கிறிஸ்தவர்களுக்கெதிரானவர்களுக்கும் ஒரு விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததுதான். ஏனெனில் இவர்கள் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ கிறிஸ்துவை நடுநாயகமாகக் கொண்டு அவரது பிறப்பை மையமாக வைத்து உலக வரலாற்றை கிறிஸ்துவுக்கு முன் (கி.மு) கிறிஸ்துவுக்குப் பின் (கி.பி) பிரிக்கும் நாட்காட்டியிலே உலகம் முழுவதும் எல்லாத் துறைகளிலும் நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்றது.

பல்வேறு மதங்கள் அல்லது நாடுகள் தத்தம் தனித்துவத்தை, தேசியத்தை, பண்பாட்டை அல்லது மத கொண்டாட்டங்களுக்காகத் தனித்தனி நாட்காட்டிகளைக் கொண்டிருந்தாலும் இவற்றின் பாவனை ஒரு வரையறைக்குட்பட்டதுதான். எல்லாப் பொது நிகழ்வுகளுக்கும் இவர்கள் கிறிஸ்தவ நாட்காட்டியையே பயன்படுத்துகின்றனர். யூதர்கள் உலகப் படைப்பு ஆண்டு என்று நம்பும் ஆண்டை (கி.மு.3760) முதல் ஆண்டாகக் கொள்கின்றனர். இஸ்லாமியர் தமது முதல் ஆண்டை முகம்மது நபி மெக்காவிலிருந்து மெதீனா நகருக்குத் தப்பியோடிய ஆண்டை (கி.பி.622) தமது வரலாறு முதல் ஆண்டாகக் கொள்கின்றனர். ரோமர் தமது கால ஓட்டத்தைத் தமது நகர் உருவான ஆண்டிலிருந்து கணித்து வந்தனர். கிறிஸ்து பிறந்த ஆண்டு அவர்கள் கணிப்பின் படி 753 (A.U.C) டிசம்பர் 25ம் நாள் நிகழ்ந்தது. சீனர்களும் இந்துக்களும் தமக்கேயுரிய நாட்காட்டியைக் கொண்டிருப்பது நாமறிந்த விடயம். நவீன காலத்தில் பிரெஞ்சுப் புரட்சியின் சூத்திரதாரிகள் கிறிஸ்தவத்தின் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியால் கிறிஸ்தவத்தின் அடையாளங்களையெல்லாம் அழிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளில் ஒன்று கிறிஸ்தவ நாட்காட்டிக்குப் பதிலாக தாம் 1792ம் ஆண்டு செப்டெம்பர் 22ம் நாள் பிரகடனப்படுத்திய பிரெஞ்சுக்குடியரசு நாட்காட்டியை ஆரம்பித்து வைத்தனர். ஆனால் இந்நாட்காட்டி 1805ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி வரை மட்டுமே நீடித்தது!

### கிறிஸ்தவ சகாப்தம் (Christian Era)

கிறிஸ்து பிறப்பு நிகழ்ந்த நாளில் நடைமுறையிலிருந்த நாட்காட்டி கி.மு.46ம் ஆண்டு ஜூலியஸ் சீசர் சக்கரவர்த்தியால் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இந்த நாட்காட்டியில் வருடத்தின் கால அளவு துல்லியமாக கணக்கிடப்படவில்லை. இதனால் நீண்ட காலப்பகுதியில் கால நிலை மாற்றங்கள் தாறுமாறாக ஏற்பட வாய்ப்புகளிருந்தன. அவ்வாறு ஏற்படத்துவங்கியுமிருந்தது. இந்தக் குறையை நிவர்த்தி செய்யுமுகமாக பாப்பரசர் 13ம் கிறகோரியர் (1572 -1585) புதிய நாட்காட்டியை அறிமுகப்படுத்தினார் (Gragorian Calendar). பழைய (ஜூலியன்) நாட்காட்டியில் ஒவ்வொரு ஆண்டுமே 11 நிமிடம் 10 வினாடிகள் அதிகமுடையதாயிருந்தது. புதிய (கிறகோரியன்) நாட்காட்டியில் முன்னரைப்போல ஆண்டில் 365 நாட்களையும் மிகுநாள் ஆண்டில் (leap year) 366 நாட்களையும் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் 400 ஆல் வகுபட முடியாத 1700,1800, 1900, போன்ற ஆண்டுகளை(365 நாட்கள் கொண்ட) மற்ற ஆண்டுகளைப் போலவே வைத்திருக்கிறது. அதிநுட்பமாகக் கையாளப்படும் வானாய்வுக்குறிப்புகள் ஜூலியன் நாட்குறிப்பேட்டில் உள்ள 11 நிமிடங்கள 10 வினாடிகள் என்னும் தவறைச் சரிசெய்கிறது.

கிறிஸ்தவ சகாப்தம் (Christian Era) கிறிஸ்து பிறப்பு நிகழ்ந்த நாளிலிருந்து கணிக்கப்படவில்லை. டயோனீசியஸ் எனும் 6ம் நூற்றாண்டில் ரோமபுரியில் வாழ்ந்த (C. 500-550) மடத்துறவி கிறிஸ்தவ சகாப்தம் கிறிஸ்து பிறப்புடன் ஆரம்பிக்கப் படலாம் என்று பரிந்துரைத்தார். இப்பரிந்துரை கிறிஸ்தவம் பரவியிருந்த இடங்களிலெல்லாம் படிப்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. கிறிஸ்தவ சகாப்தத்தின் முதல் ஆண்டின் மார்ச் மாதம் 25ம் திகதி யேசுவின் பிறப்பு அறிவிக்கப்பட்டு யேசு கன்னி மரியாள் வயிற்றில் கருவாகி உருவான தினம்(மங்கள வார்த்தை சொல்ல தினம்) கிறிஸ்தவ சகாப்தத்தின் முதல் புது வருட தினமாகக் கணக்கிடப்பட்டது. பின்னர் 1582ம் ஆண்டு பாப்பரசர் 13ம் கிறகோரியாரினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட நாட்காட்டியில் (Gragorian Calendar) புது வருட தினம் ஜனவரி 1ம் திகதிக்கு மாற்றப்பட்டது.

அருட்பணி. S.V.B. மங்களராஜா

### கிறிஸ்து பிறந்த நாள்

நற்செய்திகள் கிறிஸ்து பிறந்த நாளையோ, திகதியையோ, ஆண்டையோ தரவில்லை. லூக்கா 2:1-3 கிறிஸ்து பிறப்பினை ஒரு வரலாற்று நிகழ்வாகத்தந்தாலும் கிறிஸ்து பிறந்த ஆண்டினைச் சரியாக அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. தற்கால அறிஞர்கள் கிறிஸ்து பிறப்பு கி.மு.8-6க்குள் நிகழ்ந்திருக்கலாம் என்று கூறுகின்றனர்.

### கிறிஸ்மஸ் எப்போது கொண்டாடப்படத்துவங்கியது?

டிசம்பர் 25ம் திகதி கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டதற்கான ஆதாரம் கி.பி.336ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட ரோமன் நிகழ்ச்சிக் குறிப்பேடொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி டிசம்பர் 25ம் திகதி கிறிஸ்து பிறப்பு விழாவாக மட்டுமல்ல புதிய வழிபாட்டு ஆண்டின் துவக்கமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இத்திருநாள் ரோமாபுரியிலாவது 336ம் ஆண்டுக்கு முன்னர் கொண்டாடப்படத்துவங்கியிருக்கவேண்டும். எவ்வளவு காலத்திற்கு முன்னர் கொண்டாடப்படத்துவங்கியது எனக்கூற முடியாது.

கிறிஸ்தவர்களுக்கெதிராகக் கலாபனைகள் நிகழ்ந்த காலத்தில் 274ம் ஆண்டு ரோமை சக்கரவர்த்தியாக விளங்கிய அவுரேலியன் (270-275) ரோமையில் டிசம்பர் 25ல் சகல வல்லமையும் கொண்ட(வெல்லப்படமுடியாத) சூரியக்கடவுளுக்கு (ஒரு பெரு விழாவை ஏற்படுத்தினான். பின்னர் சக்கரவர்த்தி கொன்ஸ்ரன்ரைன் தனது மனமாற்றத்தின் பின் 311ம் பிரகடனப்படுத்திய மிலான்சாசன(Edict of Milan)த்தின் படி கிறிஸ்தவர்களுக்கு மத சுதந்திரம் வழங்கப்பட்டது. இம்மன மாற்றத்திற்கு முன் கொன்ஸ்ரன்ரைன் சூரியக் கடவுளின் தீவிர பக்தனாயிருந்தமையால் கிறிஸ்தவர்கள் இதற்குமுன் டிசம்பர் 25ம் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடியிருக்கமுடியாது. எனவே கி.பி.311ம் ஆண்டுக்கு பின்னரும் கி.பி.336ம் ஆண்டுக்கு முன்னரும் ஆன இடைப்பட்ட ஒரு கட்டத்தில் தான் டிசம்பர் 25ம் திகதி கிறிஸ்மஸ் விழாவாக கொண்டாடப்படத்துவங்கியிருக்கவேண்டும்.

கிறிஸ்தவர்கள் டிசம்பர் 25ம் திகதியை கிறிஸ்து பிறப்புத்தினமாகக் கொண்டாடுவதற்குத் தகுந்த காரணங்களிருந்தன. ஏற்கனவே இறைவாக்கினர் மலாக்கி 4:2 முன்னறிவித்த நீதியின் கதிரவனுடைய உதயத்தை சூரியன மாரிகாலத்தில் பூமியிலிருந்து தொலைவில் சென்றுள்ள (Winter Solstice) நிலையில் கொண்டாடுவது பொருத்தமாயுள்ளது. அங்கிருந்து திரும்பவும் சூரியன் மீண்டும் பூமிக்கருகாமையில் வரும் பயணம் தொடர வேண்டும். அத்துடன் அஞ்ஞானக் கடவுளின் விழாக்களுக்குப் பதிலாக பொருத்தமான கிறிஸ்தவ விழாக்களைக் கொண்டாடுவது பெரும் எண்ணிக்கையிலே அஞ்ஞான சமயங்களிலிருந்து கிறிஸ்தவத்தைத் தழுவி வந்த மக்களின் உள்ளங்களிலிருந்து தங்கள் முன்னைய கடவுள்களின் நினைவை அகற்றுவதற்குப் பெரிதும் உதவின. மேலும் மார்ச 25ம் யேசு பிறப்பு நிகழ்வு கன்னி மரியாளுக்கு முன்னறிவிக்கப்பட்டமை (மங்கள வார்த்தை தினம்) நிகழ்ந்து 9 மாதங்கள் நிறைவில் டிசம்பர் 25ம் கிறிஸ்து பிறப்பு தினம் கொண்டாடப்படுவதும் பொருத்த மானதாகவே கருதப்பட்டது.

### கிறிஸ்து பிறப்பிற்கு ஆயத்த நாட்கள் (Advent)

இவ்வாறாக டிசம்பர் 25ம் கிறிஸ்து பிறப்பு விழா நடைமுறைக்கு வந்தபின் ஏற்கனவே கிறிஸ்து உயிர்ப்பு விழாவுக்கு ஆயத்த காலமாக விளங்கிய தவக்காலத்தின் அடிப்படையில் இதற்கும் ஒரு ஆயத்தகாலம் திருவருகைக்காலம்(Advent) ஏற்படுத்தப்பட்டது.

திருவருகைக்காலம் முதன் முதலில் கடைப்பிடிக்கப்பட்டது. அப்போது கோல் (Gaul) என்று வழங்கிய தற்போதைய பிரான்ஸ் தேசத்திலாகும். 5ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்வாறான ஆயத்த காலம் அங்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளதாக பிரான்ஸ் மக்களின் ஆரம்பகால வரலாற்றாசிரியராகிய புனித டூர்ஸ் நகர கிறகோரியார் (St. Gragory of Tours) (c. 540-594) குறிப்பிடுகிறார். இவ்வாயத்தகாலம் அங்கு ஆரம்பமானபோது யேசுவின் திருக்காட்சிவிழா திருமுழுக்கு வழங்கப்படும் விழாவாகக் கொண்டாடப்படுவதற்கு ஆயத்தமாகத் தவக்கால ஆயத்த நாட்கள்

(10ம் பக்கம் பார்க்க...)

## கத்தோலிக்க உயர் கல்விக் கல்லூரியின் (CCHS) ஒளிவிழா, நத்தார் கீதங்கள் நிகழ்வு



யாழ் கத்தோலிக்க திருச்சபையால் நிறுவப்பட்டு ஆங்கில அறிவை மேம்படுத்த உழைத்து வரும் நிறுவனம் CCHS

இதன் வரலாற்றில் 6வது தொகுதி மாணவர்களின் கரோல் (CAROLS) நிகழ்வு 11.12.09 மாலை 3.00 மணிக்கு அகவொளி நிலையத்தில் நடைபெற்றது.

முற்றிலும் ஆங்கிலத்தில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு அருட்திரு. M.E. பயஸ் அடிகளார் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் தனது நத்தார் செய்தி உரையில் பிரபலமான கரோல் கீதங்களின் தோற்றம் பற்றி எடுத்துரைத்ததோடு மாணவர்களின் சொற்றாட்டையும் ஆங்கிலத் திறமையையும் மெச்சினார்.

மாணவர்கள் அனைவரும் இணைந்து 4 கீதங்கள் இசைத்தனர்.

செல்விகள் டெனிசியா, மதுரா இருவரும் பரதநாட்டியமும்

செல்விகள் ஹேமா, ஆன் நிரோஜினி இருவரும் ஆங்கில நடனமும் ஆடி எல்லோரையும் மகிழ்வித்தனர்.

செல்வி சுரேந்தினி அறிவிப்பாளராகவும், இணைப்பாளராகவும் செயற்பட்டதோடு பிரதம விருந்தினரையும் நன்கு அறிமுகம் செய்து வைத்தார்.

செல்வி ஜிவிதா நன்றியுரையில் CCHS சார்பில் எல்லோருக்கும் நன்றி தெரிவித்து விசேடமாக இயக்குனர் பதிவாளர் அவர்களுக்கும் பாடல்களைப் பயிற்றுவித்த அருட்செல்வி ஜசிந்தா மாறி (HFB) அவர்களுக்கும் அற்புதமான இசைவழங்கிய திரு. சுரேஷ் அலெக்சிஸ் அவர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இறுதியில் கிறிஸ்மஸ் தாத்தா (செல்வி டெனிசியா) வின் ஆடலுடனும், அன்பளிப்புக்களுடனும் நிகழ்ச்சி நிறைவுற்றது.

ஆசிரியர் A.S. [illegible]

## மனித மாண்பை பேணிட வந்தார்

மார்கழித் திங்கள் மாரிக்குளிரிலே
மரிமகன் பிறந்தார் மாடடைக் குடிலிலே
மண்ணையும் விண்ணையும் இணைத்திட வந்தார்
மனித மாண்பைப் பேணிட வந்தார்
மன்னிப்பு அருளி மீட்திட வந்தார்
மண்ணவர் விண்ணொளி பெற்றிடத் தந்தார்
துணிந்து இணைந்து போற்றிடுவோம் இறைமையை!
பணிந்து வணங்கி ஆராதிப்போம் சிசுவை

துன்பத்தை விதைத்திட்ட துட்டரை அழிக்கவும்
துணை நின்றழிக்க ஓர் வழி வீழ்க்கவும்
துணையின்றித் துவண்ட மானிடம் காக்கவும்
துஞ்சிய ஆன்மாக்கள் மீட்பையே ஏற்கவும்
அஞ்சிய மக்களை அணைத்துக் காக்கவும்
எஞ்சிய மாந்தரை இணைத்து மீட்கவும்
மண்ணில் உதித்த மரிபாலனை நாம்
மாண்புடன் பணிந்து ஆராதிப்போம்!

அ. அடைக்கலம்,
(தமிழ்முகில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானிகளின் காணிக்கை

கிழக்கு வானிலே நூதன நட்சத்திரம் ஒன்று நீண்ட கதிர் பரப்பிற் துலங்கியதாகத் தோன்றி ஒளி வெள்ளத்தில் உலகை ஆழ்த்துகின்றது. யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்த பொழுது இந் நிகழ்வு இடம் பெற்றது. இதனையடுத்து கிழக்கிலிருந்து மூன்று ஞானிகளும் இடைவழியில் ஏரோது அரசனை சந்தித்தபின் தமது பயணத்தை தொடங்குகின்றனர். நட்சத்திரத்தின் வழிநடத்தலுடன் பெத்லகேமுக்கு சென்று, குழந்தையாக மரியாளின் மடியில் தவழ்ந்த இயேசுவை கண்டு சாஷ்டாங்கமாக விழுந்து, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து பொன், தூபவர்க்கம், வெள்ளைப் போளத்தை அவருக்கு காணிக்கையாக வைத்தார்கள். இதன்மூலம் பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போளம் தமக்கு சொல்லும் கிறிஸ்மஸ் செய்தி என்ன என்று பார்ப்போம்.

**பொன் :-** பரிசுத்தத்தை குறிக்கின்றது. (யோவான் 6:19) தங்க ஆபரணம் எப்படி பரிசுத்தப்படுத்தப்படுகின்றதோ, அப்படியே தேவ பிள்ளைகளாகிய எங்கள் வாழ்வும் சோதனையில் புடமிடப்பட்டு தேவனுடைய பார்வையில் தூயவராக விளங்க வேண்டும்.

**தூபவர்க்கம்:-** தூயவர்களின் ஜெபத்தைக் குறிக்கின்றது (வெளி:5:8)

**வெள்ளைப்போளம்:-** வாசனை திரவியம் சாட்சியத்தை குறிக்கிறது (உன் 5:13)

கிறிஸ்துவின் பிறப்பை - பொன், தூபவர்க்கம், வெள்ளைப் போளம் மகிமைப்படுத்தியது போல தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவரை மகிமைப்படுத்தி வாழ்வோமாக. இந்த நத்தார் திருநாளை அர்த்தமுள்ளதாக்குவோம்.

வை.ஆ. கிறேசியன்
யாழ்/ புனித பத்திரிசியார் கல்லூரி.

# இறைவனுக்கும் மனிதனுக்கும் தம்மை அர்ப்பணித்து வாழும் குடும்பமே திருக்குடும்பம்

## அருட் சகோ. ரமேஸ் அ.ம.தி

அன்பினால் ஒன்றிணைந்து பெற்று உறவுகளால் அமைந்ததொரு சமூகமே குடும்பம் எனலாம். ஒன்றிப்பினை உணர்ந்து இயல்புடன் ஒற்றுமையாக வாழ்வதும், ஏனைய உறவுகளை ஏற்படுத்துவதற்கான ஒரு தொடர் முயற்சியில் ஈடுபடுவதும் குடும்பத்தின் தலையாய பொறுப்பாக கொள்ளப்படுகின்றது. இத்தகைய குடும்பப் பொறுப்பின் உள்ளாழ்ந்த அடிப்படைப் பண்புகளான சகிப்பு, இரக்கம், மன்னிப்பு ஆகியவற்றோடு, குறிக்கோளும் அர்ப்பணமும் இன்றுள்ள நிலையில் ஒரு குடும்பத்தில் அன்பு இல்லையெனில் அக்குடும்பம் உயிர் அற்ற முறையில் உறவுச் சமூகமாக வளர்ச்சியடைய வும், நிறைவு பெறவும் முடியாது. ஒவ்வொரு குடும்பமும் தங்கள் அனுபவத்தால் அனைவரையும் கவனித்து அதனை ஒன்றுபடுத்த வேண்டும். அத்து அன்பில் குடும்ப அங்கத்தவர்கள் ஆழ்ந்த முறையில் பங்கெடுக்க வேண்டும். அன்பின்றி அவர்கள் தமக்குள் ஒரு புரியாத புதிராகி விடுவார்கள்.

பலவேறு கலாச்சாரங்களை கொண்டு போட்டிபோட்டு கொண்டிருக்கின்ற இவ்வுலகில் அமைதியான, அன்பான குடும்ப வாழ்க்கை மறைந்து வருகின்றது. கணவன், மனைவி மகிழ்வுடன் வாழ்வதைப் பொறுக்க முடியாமல் அவர்கள் நடுவில் பிளவை ஏற்படுத்த முனைபவர்களையும், தமக்குள்ள ஒற்றுமையைக் குலைத்து அவர்கள் வாழ்வைக் குலைக்கும் நோக்கு நிலைகளும் மனம் பதைக்கின்ற விடயங்களையும் நாம் இவ்வுலகில் அதிகம் காண முடிகிறது. இந்த கையறு நிலையில் இன்றைய உலகில் எதிர் நீச்சல் போட்டு அனாதையான வாழ்க்கை வாழ்வதற்கு நம் வரின் அருள் நிச்சயம் தேவை என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது. அன்று நாசரேத்தில் பல குடும்பங்கள் வாழ்ந்தன ஆனால் ஒரே ஒரு குடும்பம் மட்டும் "திருக்குடும்பம்" என அழைக்கப்பட்டது. காரணம் அக்குடும்பத்தில் இயேசு இருந்தார். அதே போல் எங்களுடைய குடும்பங்களும் திருக்குடும்பமாக இருக்க எங்கள் மத்தியில் இயேசு இருக்க வேண்டும். இயேசுவின் பிரசன்னத்தை உணர்ந்து நாம் நாளும் செபத்திலும் தியானத்திலும் வளர்கின்ற குடும்பமாக வாழ வேண்டும். திருக்குடும்பம் எமக்கு காட்டும் நல் வாழ்க்கை முறையை முன்னுதாரணமாகக் கொண்டு இயேசுவின் வழியில் செல்லும் போதே எமது குடும்பங்களும் திருக்குடும்பமாக திகழ முடியும்.

திருக்குடும்பத்தின் தலையாய நோக்கம் அர்ப்பணமாகும். ஆண்டவரையே மையமாக் கொண்டு, அவரது திருவுளத்தை உண்மையாக ஏற்று



அதை நிறைவேற்றுவதில் முனைப்புடன் இருந்தது நாசரேத்தில் வாழ்ந்த திருக்குடும்பம். தனது எண்ணத் திற்கு இடமிடாது, அறியாத அப்பாற்பட்ட புலன்களுக்கு புலப்படாத இயற்கை நியதிகளுக்கு முரண்பட்ட ஒரு செய்தியை இறைவனின் தூதர் மூலம் கேட்டதும்; கன்னி மரியாள் சொன்ன பதில் "நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38). தனக்கென திருமண ஒப்பந்தம் செய்யப்பட்ட பெண் கருவுற்றிருக்கிறாள் என குழப்பத்தில் இருந்தாலும், தூதரின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு இறைவனுக்கு தன்னை அர்ப்பணித்தார் புனித யோசேப்பு. இயேசுவை வளர்த்தெடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட யோசேப்பு குழந்தையை காப்பாற்ற இரவோடு இரவாக எகிப்துக்கு ஓடுவதும் (மத். 2:13-15), மூன்று நாட்களாக காணாமல் போன மகனை எருசலேமில் தேடியதும் (லூக் 2:48) அவரது அர்ப்பணத்தின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது. இயேசுவின் அர்ப்பணம் எங்கள் எல்லோருக்குமே ஒரு எடுத்துக்காட்டான அர்ப்பணமாக உள்ளது. "என் விருப்பம் அல்ல உமது விருப்பமே ஆகட்டும்" (மாற் 14:36) என்று தன்னை முழுதும் தந்தையின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார் இயேசு. இவ்வாறு இவர்கள் மூவரும் ஆண்டவருக்கு முழுமையாக தங்களை அர்ப்பணித்ததினால் அக்குடும்பம் திருக்குடும்பம் என அழைக்கப்படுகிறது. தேவையில் இருக்கும் அயலானை இனங்கண்டு அன்பு செய்து அவனது தேவைக்கேற்ப சேவை செய்யும் குடும்பமும் திருக்குடும்பமே. இறைத்திட்டம் அவர்களில் செயல்பட அதற்கு பணிந்து அனைவரின் மீட்புக்காக தம்மை அமைக்கக்க அர்ப்பணிக்கும் குடும்பமும் திருக்குடும்பமே என்றால் மிகையாகாது.

திருக்குடும்பம் எங்கள் குடும்பங்களுக்கெல்லாம் ஓர் முன்மாதிரி. திருக்குடும்ப வாழ்வை உலகில் அனைவரும் மாதிரியாகக் கொள்ளவேண்டும். கொண்டும் என சித்தம் கொண்ட இறைவன், பீற்றர் பியன்வெனு நோஜ அடிகளார் மூலமாக ஒரு துறவற சபையை அமைத்து அதன் மூலம் திருக்குடும்ப வாழ்வை அனைத்துக் குடும்பங்களும் கண்டு பாவிக்கவைக்க செய்தருளினார். தாழ்மையும் கீழ்ப்படிதலும் தமது கல்வியை தொடர்ந்த காலத்திலே திருக்குடும்பத்தின் மேல் பற்றுக் கொண்ட அடிகளார், இயேசுவின் மனித அவதாரத்தையும், மரியாளின் மாண்பையும், மகத்துவத்தையும், யோசேப்புவின் பொறுப்பினையும் கற்றுக்கொண்டார். அவர் அந்த சிறுவயதிலே அவன் பெத்திலே உருவான எண்ணக்கருவின் உருவம் தான் இன்று எங்கள் மத்தியில் பணிபுரியும் திருக்குடும்ப சபையினர். பிரான்சிஸ்புரட்சியின் விளைவாக வாழ்விழந்த இளம் பெண்களுக்கு, இரக்கமும் கருணையும் காட்டும் அன்னையாகி ஆதித்திருச்சபையின் வாழ்க்கை முறையைக் கைக்கொண்டு, நம்பிக்கையற்ற மக்கள் மத்தியில் "எல்லாம் குழுமத்தின் விசுவாசத்தில் பங்கெடுத்து" அவர்களது பணிவாழ்வு, மனித குடும்பங்களைக் கட்டியெழுப்புவதிலும், திருச்சபையின் ஒரே உறவை வெளிப்படுத்துவதிலும், இறைவனின் மீட்பில் பங்குகொள்ள மக்களுக்கு வழிகாட்டுவதிலும் நிலையாய் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று போரின் கனதியான சூழல், நாகரிகத்தின் அதிகூடிய வளர்ச்சியினாலும், சிறுவயதினர் சீர்கேடுகளினாலும், உருக்குலைந்த குடும்பங்களையே நாம் எம் சமுதாயத்தில் அதிகம் காண முடிகிறது. ஆனால் இவை எல்லா குடும்பங்கள் மட்டில் ஓர் நீண்ட போராட்டமாக அமைய பாதுகாத்துக் கொள்வது ஒவ்வொருவருடைய உரிமையும் கடமையும் ஆகும். இன்று அடிப்படைத் தேவை திருக்குடும்பத்தை மாதிரியாகக் கொண்டு, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, இரக்கம் உள்ளம் ஆகிய பண்புகளை எங்கள் குடும்பங்களில் பிரதிபலித்து வாழ முற்பட வேண்டும். அன்று பிரான்சியப் புரட்சியினால் சீரழிந்த குடும்பங்களுக்குத் துணையாக திருக்குடும்ப சபை வடிவில் மலர்ந்த இயேசுவின் திருக்குடும்பம் இன்று எங்கள் மத்தியிலும் மாதிரிகை காட்டி குடும்ப வாழ்வை சிறப்பிக்க, திருக்குடும்பத்திடம் மன்றாடுவோம்.

# மகிழ்ந்திடாய் மாநிலமே... இறைமைந்தனின் பிறப்பினிலே...

மார்கழி என்றாலே எம் மனங்களில் ஒரு விதமான மகிழ்ச்சி, அதாவது நத்தார் பண்டிகை வரப் போகிறது என சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரின் மனங்களிலும் மகிழ்ச்சி ஆரவாரம்.

ஆனால் கடந்த காலங்களில் குறிப்பாக தமிழர்கள் மத்தியில், கிறிஸ்து பிறப்பு விழாவை பல சவால்கள், துன்பங்கள் இழப்புக்கள் மத்தியிலேயே கொண்டாடப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது நிலைமை ஓரளவு சீரடைந்துள்ளது. எம் உறவுகள் மீண்டும் எமக்கு கிடைத்திருக்கின்றார்கள். பொருளாதாரப் பின்னடைவு மற்றும் வேறு சில தடைகள் காணப்பட்டாலும் உயிருக்குப் பயந்து ஓடும் அவல நிலைமை ஓரளவு குறைந்துள்ளது. எம் தொடர்ச்சியான வேண்டுதல்கள், செபங்கள் மூலம் வன்னியிலே வாழ்ந்த எம் உறவுகள் மீண்டும் சொந்த இடங்களிற்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற காலங்களில் சில கசப்பான சம்பவங்கள், இழப்புக்கள் ஏற்பட்டிருப்பது மறக்கவோ, மறைக்கவோ முடியாத விடயங்கள் தான். இருப்பினும் இறந்தவர்களின் இழப்புக்களால், மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ள எம் எதிர்கால சந்ததிக்காக இம்முறை நத்தார் பண்டிகையை ஏழை, எளிய மக்களுடன் சேர்ந்து, பகிர்ந்து மகிழ்வுடன் கொண்டாடுவோம். உண்மையில் இவ்வாறான பண்டிகைகள் சோர்ந்து போயுள்ள மனங்களிற்கு புத்துணர்ச்சியையும், புதுதெம்பையும் அளிக்கிறது என்பது உளவியல் ரீதியில் நாம் உணர்ந்திருக்கும் உண்மையாகும். எனவே எம் ஆண்டவர் எமக்காக, எம்மிடையே அவதரித்தமை ஏழை, எளிய மக்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம். நாம் வசதிபடைத்த வீடுகளில் வாழ்ந்தாலும், எம் ஆண்டவர் மாட்டுக் கொட்டிலில் பிறந்தார் என்பதற்காக, எம் வீடுகளில் குடிலை அமைத்து அதில் இயேசு பாலனை வைத்து வணங்குகின்றோம். ஆனால் எம் அயலில் குடிசையில் வாழும் ஓர் ஏழையை ஏறெடுத்தும் பார்க்க தவறுகின்றோம். மனை வீடுகளில் இருந்தவர்கள், மாளிகைக்கு சென்றாலும், எம் மீட்பர் ஒவ்வொரு வருடமும் கொட்டிலில் தான் பிறக்கின்றார். இது, எம் சமூகத்தில் குடிசைகள் குறையவில்லை. ஏழ்மை ஒழியவில்லை என்பதையே காட்டுகின்றது.

ஒருவேளை உணவிற்கு வழியின்றி பக்கத்து வீட்டில் ஓர் ஏழை தவிக்க, வண்ண வண்ண விளக்குகளால் எம் வீடுகளை அலங்கரித்து கிறிஸ்மஸ் விழாவை கொண்டாடுவது எம் ஆண்டவரிற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துமா?

பகையுள்ள மனத்துடன் எதிரே வரும் பகைவனைப் பார்த்து புன்னகைக்க மறுக்கும் நாம், பல வித உணவுவகைகளை செய்து எம் நண்பர்களிற்கும், எமக்கு பிடித்தவர்களிற்கு மட்டும் கொடுத்தால், அது எம் பாலகனிற்கு சந்தோசத்தை ஏற்படுத்துமா? எனவே, ஓரளவு இயல்பு வாழ்க்கைக்குள் திரும்பிக் கொண்டிருக்கும் நாம், இம்முறை கிறிஸ்மஸ் விழாவை ஏழை மக்களுடன் சேர்ந்து, ஆனந்தமாக கொண்டாடுவோம். எம் அயல்பக்கங்களில் வாழும் ஓர் வறிய சிறுவருக்கு புத்தாடை எடுத்து கொடுப்பதன் மூலமோ அல்லது உணவுப் பொருட்களை கொடுப்பதன் மூலமோ நாமும் மகிழ்ந்து அவர்களையும் மகிழ்விப்போம். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்.

"உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக!
உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!
(லூக். 2:13-14)

தோமஸ் ரேகா,
நாவாந்துறை.

# பாலகனுக்காய் எமது வாழ்வுகள் மாறுமா?

மனித வாழ்வுகள் தடம் மாறிச் சென்று கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் இறைவனின் மனு உருவை மையமாக் கொண்டு ஒரு சில வார்த்தைகளைச் சற்றுச் சிந்திப்போம்.

மனிதனைப் பாவ அகழியிலிருந்து மீட்கவே இறைவனின் மகன் மனுவுருக்கு வந்தார். ஆனால் இன்று எம்முடைய வாழ்வுகள் விண்விட்டு மண் வந்த இறைவனின் அன்பையும் மீட்பையும் மறந்து மேலும் மேலும் பாவத்திலுள் அமிழ்ந்து, சீக்கிரம் தன்னைத் தானே மாய்த்துக் கொள்கின்றன. ஆகையால் இன்றைய காலகட்டத்தில் உறுதியான மனமாற்றமொன்று அவசியமான ஒன்றாக அமைகின்றது.

மனமாற்றம் என்பது எண்ணம், சிந்தனை, நடத்தை, செயல்களின் இறைவனுடைய வார்த்தையையும் இயேசுவின் மனனுலகில் வாழ்ந்த வாழ்க்கையையும் வாழ்வதே ஆகும்.

இன்று அறிவியலின் வளர்ச்சியால் மனிதனது வாழ்வு வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாகப், போலியான காட்சிகளைக் காண்பிக்கின்றன. ஆனால் அவற்றின் அகமோ மிகவும் பயங்கரமான தீமைகளைத் திரையிட்டு மறைக்கின்றது. இந்த நிலை மாற வேண்டும். நாம் அனைவரும் எமது கல்லான மனங்களை மாற்றி இயேசுவின் வாழ்வை எமது சமூகத்தில் வாழ வேண்டும். தினமும் வேதாகமம் வாசித்துச் செபிக்க வேண்டும். பிறக்கப் போகும் பிஞ்சுப் பாலகனுக்காக உண்மையானதும், நிலையானதுமான மனமாற்றத்தை எம் மால் எம்முள் ஏற்படுத்த முடியுமா? சற்று ஆழமாய்ச் சிந்திப்போமா?

செதின் வேஜினியா செபமாலை
யாழ்ப்பாணம்.

# தொழுவமதில் பாலனைத் தொழுவோம்

காரிருளை மறைந்து கொடுமழை ஓய்ந்தது
குளிரோடு தென்றல் செவிதனில் நுழைந்தது
பார்தனில் பாலகன் இயேசுவின் மலர்வினால்
பெதலேகம் புதியதோர் பொலிவினைப் பெற்றது
மார்கழி கிறிஸ்மஸ் பண்டிகை வருகையால்
மாட்டுடைத் தொழுவமும் மனதினில் பதிந்தது
வேர் தனை பரப்பிய இறைமகன் வேதம்
வையகம் வளம் பெற வணங்குவோம் வாரீர்

அல்வையூர்
கே.ஆர். திருத்துவராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய விடியல்

துயரங்களும், ஏமாற்றங்களும்
தொடர் கதைகள் ஆகிவிட்ட
நிலையில்
மனங்களில் ஏக்கங்களுடனும்
கண்களில் தேடல்களுடனும்
நகர்கின்றன எங்கள் பொழுதுகள்
எங்களுக்கான விடியல் எப்போது?
என்ற வினாவுடன்....
விடி வெள்ளி உம் வரவால்
மலரட்டும் எம் வாழ்வில்
புதிய விடியல்

A. நிலா
புனித தோமையார் ஆலயம்,
பருத்தித்துறை.

## பாலகனே நீவாராய்

பனியின் படுக்கையிலே
பாவிகளை மீட்பதற்கே - இயேசு
மனித அவதாரம் எடுத்து வந்தார்
இயற்கையின் சிற்றத்திலே
மானிடர் நாம் வாழ்ந்திடவே
காட்சிகள் பலபுரிந்து
கடந்தனாள் முழுவதுமே
கண்மணிபோல் காத்துவந்தீர்
தென்றல் எனும் நட்புடனும்
பறவையின் இசையுடனும்
பாரினிலே நாம் வாழ
நாளைய பொழுதினிலே
ஒரு மலரும் மலராக
மாடிடைக் குடிலினிலே
மார்கழி மாதத்திலே
அன்னை மரியின் மடியினிலே
தூயவராம் நீர்
பாலகனாய் வந்திடுவீர்
நாட்டின் இரத்தக் கறை போக்கி
இனங்கள் சந்தோசமாகிடவே
காட்டினாய் புதுவழியை
கொட்டும் மழை நடுவினிலே
அன்னை மரியின் மடியினிலே
செல்ல அழுகையுடனும்
சின்னச் சிரிப்புடனும்
மக்களை மகிழ்விக்க
நீவாராய் பாரினிலே
புது யுகத்தைப் படைத்திடவே
நாளை மலரும் புதுமலராய்
மக்கள் மனங்களை மகிழ்விக்க
நீவாராய் பாரினிலே

ச. மேரி சீனு, நெடுத்தீவு - 11

## புரியாதவைகள்

மூன்று தசாப்பத்தின் முடிவு
கசப்பானவை தான்...
ஒவ்வொரு விடியலிலும்
முட்கம்பி வேலிகளுக்குள்ளும்
தடுப்பு முகாம்களினுள்ளும்
முடக்கப்பட்ட எம் உறவுகளின் - விம்மி
அழும் குரல்கள் கேட்கின்றன
இருப்பினும்
கசங்கி போகாத
கிறிஸ்து பிறப்புக்காய்
காத்திருக்கின்றேன் வழிப்புடன்!
நாளைய மீதான நம்பிக்கை - எனக்கு
பட்ட மரத்து துளிராகட்டும்!
நிகழ்ந்தவைகளின் நினைவுகளும்
நிகழ இருப்பவற்றின் கனவுகளும்
நிகழ்கால நிஜத்தை
கலங்கடிக்காதிருக்கட்டும்
மீண்டும் தலைநிமிரும்
விடுதலை பெறும்
புண்ணிய நாட்கள்
எமக்கு தொலைவில் இல்லை
ஒளியின் பிறப்பு - எமக்கு
புரியவைக்கின்றது....
"அவர்களுக்கோ....."
இவை என்றுமே
புரியாதவைகள்!....

T.D. குருஸ்
புங்குடுதீவு - 12

## காவலனே சுமந்து செல்வாயா? எம் பாலகன் பிறப்பினை

வருக வருக பாலனே - இவ்
உலகமே தினமும் உம்மை தரிசிக்க
வளர்க உம் அருளால் எம் தேசம்
தினமும் உம் அன்பில் வாழவே

பாலனே! உம் வரவே எதிர்பார்த்து
விழித்துக் காத்திருக்கின்றோம் - நாம்
ஏழைகளின் செல்வமல்லவா? நீர்
எமைப் போன்ற பாவிகளை மீட்க ஓடி வாரீர்

உறவுகளைப் பிரிந்த வேதனைகளிலே
வலிகளின் நடுவே வாழ்ந்து வருகின்றோம்
முட்கம்பிகளிற்குள்ளேயும் எம் பாலகன்
வந்து பிறப்பார் என எதிர்பார்த்து

உமது வாழ்க்கையே எம் அனுபவ வாழ்வினிலும்
தருசனம் தருவீரா! எம் முகாம் மக்கள் வாழ்வினிலே
இனியும் வேண்டாம் இப் பேரவலம்!
விடிவு கிடைக்கும் எம் பாலகன் வரவினிலே

D. அமலா
சிலாவத்தை, முல்லைத்தீவு.

## பாமரர் வடிவில் பாலகன் இயேசு

நடுங்கும் குளிரில்,
நாயகன் இயேசு,
கன்னியின் மடியில்,
கண் விழித்தீரே!
இருளின் நடுவே,
இருந்த மக்கள்,
ஒளியைக் கண்டு,
ஓடி மகிழ்தனர்
வானவர் பாடினர்,
ஞானிகள் கூடினர்,
பொன்னும், பொருளும்,
வெள்ளிப் போளமும்,
வேந்தனே உமக்கு,
காணிக்கையாக்கினர்

ஏழை உருவில்
"ஆ" வின் குடிலில்,
அருள் நிறை மரியின்
ஆசியைப் பெற்றீர்.
பாரினை மீட்க,
பாமரன் வடிவில்,
பாலனாக பர்ணமித்தீரே!
வேதத்தை பரப்பி,
வேதனை தீர்க்க,
வேந்தனாய் உதித்தீரே!
தாவீது குலத்து,
தலைச்சன் மகனே - இத்
தரணி உமக்காய்,
தலை வணங்கிடுமே!

திருமதி. கில்டா - ஜெகதீசர்
பேக்கறி லேன், யாழ்ப்பாணம்.

## இரங்கிடுவாய் பாலா....!

பாரினில் பாவிகள் - எம்
பாவங்களைப் போக்கிடவே
மாடடையும் குடிலினில்
வைக்கோல் பஞ்சணையில்
விண்யோர்கள் பாடிட
மண்ணோர்கள் மகிழ்ந்திட
மாமரி மடிதன்னில் - அன்பு
மானிடனாய் மண்ணில்
அவதரித்த பாலனே - இன்று
நாடற்ற அகதிகளாய்
நம்பிக்கையின்றி நடைபிணங்களாய்
சொந்த மண்ணை பிரிந்து
சொந்தங்களை இழந்து
சொத்துக்களை கைவிட்டு
சுகங்களை மறந்து
சொந்த மண்ணில் அடிமைகளாக
சொல்லொண்ணா துயரங்களுடன்
சொல்லிட வார்த்தைகளின்றி
சொரிந்திட கண்ணீருமின்றி
தொலைந்த வாழ்வையும்
இருந்திட்ட சந்தோசத்தையும்
இழந்து தவிக்கின்ற - எமக்கு
இருளின் திரை அகற்றி
அகத்தினில் ஒளியேற்றி
அனுதினமும் அமைதியுடன்
அன்புறவில் ஐக்கியமாகி
ஆனந்தத்துடன் வாழ - பாலனே
இரங்கிடுவாய் எங்கள் மீது

A. அஜந்தா பொற்பதி, குடத்தனை.

## விடையாய் நீர்...

ஆதியின் பாவ இருளில் இருந்து
விடுதலை தர
தந்தை இறைவன் வாக்களித்த
விண்ணின் விடியலே...
மார்கழிப் பனியின் ஒரு
நடு இரவில்
பெத்லகேமின் மாட்டுத் தொழுவத்தில்
நம் பாவ இருள் போக்க
குழந்தையாய் அவதரித்தவரே...
எங்கள் விடைகாணா
வினாக்களுக்கு விடையாய்
நீர் வர வேண்டும்.

A. டிலாந்தி
புனித தோமையார் ஆலயம்
பருத்தித்துறை.

## பாலகனை போற்றிடுவோம்

மனுக்குலத்தை மீட்டிடவே
மனிதனாக வாழ்ந்தவரே
மானிடரின் பாவம் போக்க
மகிழ்ந்து மண்ணில் மலர்ந்தவரே

துயரம் நெஞ்சை துளைத்திடவே
ஆறுதல் அழித்திட எவரும் இல்லையே
புகலிடம் எமக்கு தருவாரில்லையே
புத்தியில்லா ஜீவன்களாய் புவியில்
நாம் அலைகின்றோம்

கன்னி மரியின் உதிரம் தன்னில்
கன்னியாய் மலர்ந்த கண்மணியே
காலை பனியாம் உன் வரவால்
கவலை யாவும் கரைந்ததுவே

வறியோர் எமக்கு வைகையாக
வாழ்வு தரவே வந்துதித்தாய்
பாலகனே மன்னவனை போற்றிடுவேனே
பணிந்து பாதம் போற்றுவேனே

ம. லூவிஷா, யாழ்ப்பாணம்.

## எம் நிலை பாராயோ பாலகா

நெல் விளைந்த பூமியிலே
எம்மவர் பிணக்குவியல்கள்
புதையுண்ட நிலைதனைப்
பாராயோ பாலகா

கூடித்திரிந்த பாசப்
பறவைகள் எல்லாம்
கூண்டோடு அழிந்த
நிலை பாராயோ பாலகா

சொந்தங்கள் எல்லாம்
தொலைதூரம் சென்று
சோககீதங்களே இன்று
எம்முகவரிகளாகி
வழிதேடியலையும் நிலை
பாராயோ பாலகா
கண்ணீர்த்திவலைகளுடன்
தினமும் அங்கலாய்க்கும் - எம்
காரிருள் சூழ்ந்த வாழ்வில்
உன் பிறப்பால் பேரொளி
பாலித்திடாதா பாலகா

S.J. ஸ்ரெலா, மல்வம்.

## கருவறையில் ஓர்கானம்!

பத்து மாதங்கள் கருவறையில்
பத்திரமாய் இருந்துவிட்டு
இருள் சூழ்ந்த தேசமதில்
இப்போது நான் பிறவேன்!
வேற்றுமை உணர்வுகளால்
வெந்து போன தேசமதில்
நேசமழை பொழிய வேண்டும்!
நியாயங்கள் தளைக்க வேண்டும்!
பழிவாங்கும் எண்ணங்கள்
பனிபோல விலக வேண்டும்!
எம்மதமும் சம்மதமாய்
எல்லோரும் ஓர்குலமாய்
குலவுகின்ற காலமதில்
கருவறை விட்டு நானும் - இவ்வுலகில்
காலடி பதித்திடுவேன்
அதுவரை பத்திரமாய்
அம்மா உன் கருவறையில்
இன்னும் சிலகாலங்கள்
இன்பமாய் இருக்கின்றேனே!

பியோ
புனித யாகப்பர் ஆலயம்.

## நூலகமாய்...

வாய் மொழி வழியாய்
வழி தொடர்ந்து
தேன் தமிழிலும்
தன் பெயரை
விவிலியம்
என்றுரைத்த
விண்ணவர்
வார்த்தையே....

மனித மீட்பின்
மறைப் பொருளாய்
எழுத்திலே வெளிவந்து
மொழிகளில் தொற்றி
எச்சம் காண
அச்சேறிய
சொச்சமே
சுடரொளியே....

செப்துவாஜிந்தா என
செதுக்கிய கிரேக்கமும்
வுள்காத்தா எனும்
இலத்தீன் சித்திரமும்
பால்குவின் பதிப்பால்
பைந்தமிழும் பங்காகி
பல்லின மக்களின்
பற்களிடையே சொற்கள்
சொந்தச் சீர் மொழியில்
சிந்தச் செய்தன.....

தொடக்க நூல்
தொடங்கி
திருவெளிப்பாடு
வரையில்
எத்தனை புத்தகங்கள்.....
மறுபுறம்,
விவிலியம் வரலாறா...?
கணிதமா...?
விஞ்ஞானமா....?
கணக்கற்ற கேள்விகள்
கணைகளாய்
காத்திருக்க.....

அத்தனையும் வித்தான
அருமருந்தாய்
இறையவன் அருளால்
திருவுரு எடுத்த
மாபெரும்
மனிதப் படைப்பே.....

உலகியலின்
அசைவுகளை
அருளவன்
திசை திருப்பும்
விசையே.....

வாசித்து வாழ்வு பெற - நீ
நூலாகவல்ல
நூலகமாய்...

G.A. ஜெலான்,
யாழ். பல்கலைக் கழகம்.

## தமிழனாக நம் கிறிஸ்து பிறப்பாரா...?

பிறக்கும் கிறிஸ்துவை ஒருமுறைமட்டும்
தமிழனாய் பிறக்கச் சொல்லுங்கள்
அகதி வாழ்வை அனுபவிக்கச் சொல்லுங்கள்
சிங்கப்பல் முளைத்தவரால் காயப்படச் சொல்லுங்கள்
கண்ணெதிரே கற்பழிப்பை காணச் சொல்லுங்கள்
பள்ளி சென்ற பாலகரை தேடச் சொல்லுங்கள்
சிதறிக் கிடப்போர் சதை சேர்க்கச் சொல்லுங்கள்
எதற்குமே வரிசையில் நிற்கச் சொல்லுங்கள்
அடுத்தவன் கையை எதிர்பார்க்கச் சொல்லுங்கள்
புதைக்கப்பட்டவர் விலாசங்களை புரட்டச் சொல்லுங்கள்
சந்தேகத்தின் பேரில் கைதாகச் சொல்லுங்கள்
பசியின் தவிப்பை மறக்கச் சொல்லுங்கள்
பள்ளிப் படிப்பை மறக்கச் சொல்லுங்கள்
அங்கங்கள் யாவையும் இழக்கச் சொல்லுங்கள்
அகதி வாழ்வை வாழச் சொல்லுங்கள்
இன்னும் அதிகமாய் போனால் இடம்பெயர்ந்து ஓடச்
சொல்லுங்கள் நிச்சயம் செய்வார் ஏனெனில்
பாவம் தவிர மற்ற அனைத்திலும்
எம்மை போன்றவர் அவரே.

யென்சி பிரான்சிஸ்
புதுமை மாதா ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிறிஸ்து பிறப்பால் வாழ்வு மலர வேண்டும்

புதுப்படைப்பாய் புத்தாண்டில் நாம் புதுவாழ்வு
அமைத்திட புனிதனே உனைத் துதிக்கின்றோம்
முகாம் வாழ்கை ஒழிந்திட
முட்கம்பி வேலி மறைந்திட
இயற்கை அனர்த்தங்கள் விலகிட
இடர்படும் மக்கள் குறை தீர்த்திட
இழந்த கல்வியை மீளப் பெற்றிட
உலகம் மகிழ்வுற, உண்மை உயர்ந்திட
கலகம் ஒழிய கவலைகள் தீர்ந்திட
இழந்த வாழ்வை மறுசீரமைத்திட
ஈரமுள்ள மனது உருவாகிட
பிரிந்த உறவுகளின் இன்னல் நீங்கிட
உண்மை அமைதி அளித்திட
எம்மிடையே வாரும் பாலகனே

செல்வி. யூட்டினா சுபாஜினி
அலோசியஸ் போல்
அச்சுவேலி.

## ஓர் குலமாய் எழுந்திடுவோம்

புரட்சிகளும் பிரிவினைகளும்
இனித் தேவையில்லை
ஓர் குலமாய் எழுந்திடுவோம்

இனம் மொழி சாதிப்பிரிவினை
இனித்தேவையில்லை
ஓர் குலமாய் எழுந்திடுவோம்

வறுமையும் கொடுமையும்
இனித் தொல்லையில்லை
ஓர் குலமாய் எழுந்திடுவோம்

பகைமையுணர்வினைக் களைந்து
சகோதரர் நாமென
நடந்திடுவோம்

பாலன் இயேசுவின் பிறப்பில்
புதுயுகம் நோக்கி திடந்திடுவோம்

யே.போல் அமலதாஸ்
கொழும்புத்துறை.

## இயேசுவின் வடிவம்

தூய்மையின் வடிவம் இயேசு
புத்தியின் வடிவம் இயேசு
நட்பின் வடிவம் இயேசு
அன்பின் வடிவம் இயேசு
குழந்தையின் வடிவம் இயேசு
வாழ்வின் உயிரும் ஊட்டமும் இயேசு

இசையின் வடிவம் இயேசு
வாழ்வின் வடிவம் இயேசு
நேர்மையின் வடிவம் இயேசு
ஒளியின் வடிவம் இயேசு

கழுப்படுதலின் வடிவம் இயேசு
வெற்றியின் வடிவம் இயேசு
நற்கருணையின் வடிவம் இயேசு
மீட்பின் வடிவம் இயேசு
தாழ்ச்சியின் வடிவம் இயேசு

ஆசிரியரின் வடிவம் இயேசு
இறைவார்த்தையின் வடிவம் இயேசு
மார்கழி பனியின் வடிவம் இயேசு

உ. சோபனா,
சக்கோட்டை

## விமலனே! நீ இற(ர)ங்க வேண்டும்

உண்மை நிலைக்க வேண்டும்
உலகம் உய்ய வேண்டும்
கண்ணீர் ஒய வேண்டும்
கவலைகள் நீங்க வேண்டும்
பண்புகள் ஓங்க வேண்டும்
பாசம் நிறைய வேண்டும்
மண்ணில் அமைதி வேண்டும்
மனிதம் மாண்புற வேண்டும்
எண்ணங்கள் மாற வேண்டும்
எல்லாமே நலமாக வேண்டும்
விண்ணில் மட்டும் வாழாமல்
விமலனே! நீ இற(ர)ங்க வேண்டும்

R.A. நாயகி
புனித யாகப்பர் ஆலயம், குருநகர்,
யாழ்ப்பாணம்.

## "வளமார்ந்த திருவாழ்வைத் தாரும் மழலை இயேசுவே"

வெள்ளி மணி நாதம் முழங்கும் இனிய ஓசையிலே – வள்ளலே!
குழந்தை இயேசுவே! நின் அழைப்பின் குரல் கேட்குதையா!
சிறு பிள்ளைகளின் புன்னகைவதனத்தில் – நின்
பொன்னழகுத் திருமுகம் மின்னுதையா!
புள்ளி மயில்த் தோகையில், கலைமானின் புள்ளியின் வடிவழகில்
அளப்பரிய உன்திறமை அள்ளி மிளிருதையா!
தவளைகள் தவழும் குவளை இதழ்ப்பொய்கையிலே
'அற்புதச்சிற்பியுன் பெருமை தோன்றுதையா'
குங்குமச் செவ்வானில் குழையும் வானவில் வண்ணத்தில்
மழலை இயேசுவே:புன் கோல எழில் இலங்குதையா!
பவளம், ஒளிர்முத்து, மாணிக்கம், வைரம், வைடூரியம், இரத்தினம்
கோமேதகத்தில் உன்கை வன்மை துலங்குதையா!
காமுகின்ற எள்ளின் இதழின் மென்மை, நின் திருநயனத்
தெய்வீக மேன்மையை இயம்புதையா!
அகர முதல எழுத்துக்களில், அகழ்ந்தெடுத்த தமிழ் முத்துக்களில்
நின்னைத் துதிந்து, நித்தமும்! போற்றி, எற்றி,
புகழ்ந்து, மகிழ்ந்து, பாடி யாம் வணங்கி வாழ்த்திடுவோம்; தேவா!
பகவுயர், நற்சிந்தனையும்; புத்தியும்; பக்தியுணர்வும், நற்சேம, சுகமும்,
தந்து இவ்வுலகைக் காத்து இரட்சிப்பாய்!
தன்னிகரில்லாத் தலைவனே! நின் வருகையால்!
இன்னமுதப் பொன்னொளியில்
வளமார்ந்த திருவாழ்வைத்தாரும் மழலை இயேசுவே!

நவரத்தினம் சுகதீபன்,
மட்டக்காய்ச்சி,
உடுவில் தெற்கு, சுன்னாகம்.

## அமைதியை எம் மண்ணிற்கு தாருமையா

அமைதியின்றி அலைகின்றோம் இப்புவிதனிலே
அமைதியை தாருமையா
அன்பிற்காய் அமைதிக்காய் ஏங்குகின்றோம்
அரவணைக்க வாருமையா

மனிதனாய் மண்ணில் மலர்ந்த பாலகனே
மரணம் மலிந்து மனிதம் விலைபோய் மடியும்
எம் வாழ்வில் மீண்டும் வந்து அழமைத்தனம் நீக்குவீரே

மாந்தர் அனைவர்க்கும் மகிழ்ச்சியூட்டும்
உம் பிறப்பை மாடடைகாக்கும் இடையர்களுக்கு வழங்கினீரே
ஏழைகள் இல்லாதோர் ஒளியாய் வந்துதித்து – இப்
புத்தாண்டில் எம் வாழ்வை புதுப்படைப்பாய் – மாறிட
பாலகனே, எம் மண்ணில் உம் அருளைத்தாருமையா

சே. மேரிபற்றிமா
புனித யாகப்பர் ஆலயம், குருநகர்

## இன்னொரு மார்கழிக்காய்...

இயேசு பாலனே!
வாழ்வின் அர்த்தங்களுக்காய்
அலைகையில்
மரண அகராதி
அகலத்திறந்து
கல்லறைக்குள்
அர்த்தங்களை கற்பிக்கிறது...

பிறப்புக்களின் பின்னணி
கொடூரக் கொலைகளில்
ஓய்ந்து போகின்றன
கனத்த இதயங்களில்
கல்லறை நினைவேயன்றி
அணுவில் பாதியும்
சந்தோசமில்லை
எதிர்பார்த்த விடுதலை

தலையற்ற முண்டமாக
மூச்சின்றி
முடங்கியுள்ளோம்...
இருந்தும்
இடர்கள் பல தாண்டி
இன்னொரு மார்கழிக்காய்
எம் மனங்களை
மலர்களாக்கியுள்ளோம்

உடைந்த உள்ளங்கள்
இழந்த இல்லங்கள்
ஈழத்தில் ஏராளம் இருப்பதால்
இம்முறை மட்டும்
மாட்டுக் கொட்டிலை மறந்து
மனித மனங்களில்
மனுவுருவெடு தேவா...

அருட்சகோதரன். அ. அல்வின்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## மாட்சியில் மகிழ்ந்திடுவோம்

மார்கழி மாதமிது
மனம் குளிரும் வேளையிது
மன்னவன் இயேசு பிறந்தார்
மானிடமே மகிழ்ந்திடு

கன்னி மாதா மடிதனில்
கண் விழித்தார் கடவுள் மகன்
காரிருள் விலகும் இனி
மானிடமே மகிழ்ந்திடு

காலங்கள் வென்றுள
தீமையை கொன்றாழ
எல்லோர்க்கும் வாழ்வு
கொடுக்க எளியவனாய் வந்துள்ளார்
மானிடமே மகிழ்ந்திடு

அன்பின் ஆழம் சொல்ல
தியாகத்தின் எல்லை சொல்ல
உண்மையின் தன்மை உணர்த்த
உலகத்தின் வேந்தன் பிறந்தார்
உலகமே மகிழ்ந்திடு

ச. அசிஸ்குமார், மெலிஞ்சிமுனை, ஊர்காவற்றுறை.



## திருவுருவே உன் பிறப்பே தரிசனம்

மன்னன் யேசு பிறக்க
மரியின் மனம் வேண்டுமே!
மாசுகள் நீக்கிட மழலையாய் பிறந்தார்
மாட்டிடையர் மத்தியில் மரகதமாய் வந்தார்
தினம் தினம் திகிலுறும் எமக்கு
திருவுருவே உன் பிறப்பே தரிசனம்
திசைதெரியாமல் செல்லும் எமக்கு
தேனமுதே நீயே துணையப்பா
யாரிடம் போவோம் அடைக்கலமாக
ஆண்டவன் நீயே உன்னையே நம்பினேன்

H.B. டியூலா
கொய்யாத்தோட்டம்.

## சங்கமமாகட்டும்!

மன்னவன் இயேசுவின்
மண்ணக மலர்வினால்
மனுக்குலம் கண்டது
மீட்பதன் பாதையை!

என்னவோ எங்களின்
ஏதிலி வாழ்விலே
இன்னமும் தொடருது
இடும்பைகள் கோரமே!

மாடடை குடிலிலே
பாபரன் உதித்தது
மனுக்குல பாவங்கள்
மாற்றிட எண்ணியே!

நலன்புரி நிலையங்கள்
நம்மையே அடைக்குது
நலன்களை ஊட்டவா
நம்மைச் சிறைபூட்டவா?

எங்களின் நாயகன் எழுதினார்
மாற்றத்தை
பொங்கிடும்
மகிழ்வினை
பொக்கிஷ மாக்கினார்!

தங்கவேஇடமின்றி
தவிக்கின்றோம் நாங்களே
தரணியில் மாற்றந்தான்
தளைப்பது எப்போது?

சண்டையும் முடிந்தது!
சரித்திர ஏட்டிலே
சமாதானம் நிலைத்திட
சத்தியன் உமதருள்
சங்கமமாகட்டும்!

சூரியநிலா, உசன்

## சங்கே முழங்கு

எங்கும் நிறைந்தவர் ஒளி வரவை
எண்ணி மகிழ்ந்து சங்கே முழங்கு
சங்கத்தமிழின் பாதுகாவலன்
சத்தியவேத உவமை நாவலன்
தங்க ஒளியாய் தரணி வந்தாரென்று
தகதக திமுவென்று சங்கே முழங்கு
பொங்கு நினைவுகள் நலமாய் மாற
புதுப்புனலாடி சங்கே முழங்கு
மங்காத ஒளி மாநிலம் நிறைந்ததென்று
மாட்டுத்தொழுவமும் காவியமானதென்று
தங்கு தடையின்றி தரணிவளம் பெற
தன்மானமுடன் எழுந்து சங்கே முழங்கு
பங்கமுறு தமிழரின் வாழ்வு நலம்பெற
பூம்பூம் என்று சங்கே முழங்கு

பாலன் சேவியர், அல்லைப்பிட்டி - 3

## மீண்டும் வா மெய்ப் பொருளே! மேகத்தின் தூண்களிடையே!

தந்தையும்; தாயுமாகி விண்ணுலகில் நிறைந்தாய்! தேவ
மைந்தனாகி மண்ணுலகில் பிறந்தாய்!
தூய ஆவியாகி எம் உள்ளே உறைந்தாய்!
மூவொரு இறைவனே! மறைபொருளே!
அந்தகன் இருள்கௌவி இந்த அவனியை ஆட்சி புரிந்திடுதே!
சொந்தம், சுற்றம், சொத்து, சுகம் யாவும் இழந்து – அகதி,
அநாதைகளாய்
அந்தர வெளியில் தட்டுத்தடுமாறும் செம்மறி – மந்தைகளாய்
சிதறிச் சீர்கெட்டோம்
இந்த இழிநிலை கண்டும் காணாத நின் திருச்சிந்தையின்
விந்தைதான் என்ன? விளங்கவில்லை விமலனே!
எமைச்சூழ வந்தவினைகள், வரும் வினைகள் யாவையும்
வெந்தழலிற் பஞ்சு போலப் பொசுக்கிடுவாய் – பரமனே!
பிந்தாமல் இந்தப் பிருதுவியில் எமக்கிரங்கி யருளி
மங்காப் புகழுடன் மனித மாண்பைப் பேணும்
மங்களப் பெருவாழ்வை மனங்களிந் தெமெக்கே – தந்தருளும்
தயாநிதியாய் வந்துதித்து சுந்தரச் செஞ்ஞாயிறு எனவே
மீண்டும் நீ வா; மெய்ப்பொருளே!

செ. ஜெனிஸ்ரெலா, மல்வம், உடுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் - 2009?

அருட்பணி மா. ஜெறாசிலஸ் இராசநாயகம்

## முகவுரை :

எமது இன்றைய வாழ்வு... களைத்து நிற்கும் மனங்களும், கவலை தோய்ந்த முகங்களும், கண்ணீர் நிறையும் கண்களும், கரைத்துருக்கும் நோய்களும், அமைதியிழக்கும் மோக, முகாம்களில் விடுதலைக்காக ஏங்கி எழும் விம்மல்களும், பெருமூச்சுக்களும்... இவற்றின் மத்தியிலும் நாம் எதிர்பார்த்திருக்கும் கிறிஸ்மஸ் தரும் செய்தி என்ன?

கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி என்பது வாழ்க்கையை மறந்து பாட்டுப் பாடுவதிலும், கொண்டாட்டங்களைக் கொண்டாடுவதிலும் அடங்குவதில்லை. குதூகலமெல்லாம் கிறிஸ்மஸ் அல்ல. கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி வாழ்க்கையின் மகிழ்ச்சி. வாழ்வில் இறைவனைக் கண்டு கொள்வதனால் ஏற்படும் மகிழ்ச்சி. கிறிஸ்மஸ் ஒரு பயணம். ஒரு தொடர் நிகழ்ச்சி. மேல் குறிப்பிட்ட மனித அவலங்கள் மத்தியில் அர்ப்பணத்தோடு ஈடுபாடு கொண்டு உழைக்க, மனிதத்தைக் மீளக் கட்டியெழுப்ப இறைமகன் இயேசு விடுக்கும் உன்னத அழைப்பு. கிறிஸ்து பிறப்பின் சூழலைப் பார்த்தால், அடிமைத்தனமும், விடிவே இல்லாதது போன்ற இருளை, அங்கலாய்ப்பும் நிறைந்த ஒன்று. உலகப்போக்குகளின் ஆதிக்கங்கள் தலை தூக்கி நின்ற நேரம். இன்றைய சூழல் எப்படியோ, அதே போன்றுதான் அன்றும். பின்வரும் விவிலிய நிகழ்வுகளை எடுத்து இன்று அவை நம்மிடம் வேண்டி நிற்கும் அழைப்பு, ஈடுபாடு என்னவென்று ஆராய்வோம்.

## நாசரேத்திலிருந்து பெத்லேகெம்

இருளும் அடிமைத்தனத்தின் கொடூரமும் நிறைந்த நேரத்தில்தான் நாசரேத்திலிருந்து பெத்லேகெமிற்கு பயணம் தொடங்கியது. "நாசரேத்து" என்றால் எவ்வித நன்மையும் இங்கிருந்து ஏற்படாது என்று கருதப்பட்ட இடம் "நாசரேத்திலிருந்து நல்லது ஏதும் வரமுடியுமோ?" (யோவான் 1:46) "பெத்லேகெம்" என்றால் அப்பத்தின் வீடு. வாழ்வும், சமாதானமும் தரும் இறைவனைத் தேடும் இடம் என்று பொருள். குழந்தைதான் ஒரேயொரு அடையாளம். அதாவது, மனித பலம் ஒன்றுமில்லை. இறை பலம் ஒன்றுதான் நமக்கு நம்பிக்கையும் சமாதானமும் தரும் என்று உணர்த்திய சூழல். எனவே, நாம் இங்கிருந்து எதுவித நன்மை ஏற்படக்கூடுமோ என்ற நாசரேத்து என்னும் எமது மனித நிலையிலிருந்து, ஆண்டவர் நமக்கு வாழ்வும், சமாதானமும் தருகின்றார் என்ற "பெத்லேகெம்" எனும் மனநிலைக்கு பயணம் செய்யும் ஒவ்வொரு முறையும் எமது வாழ்வில் கிறிஸ்மஸ் நடைபெறுகிறது.

## முதல் கிறிஸ்மஸ்

பாலனைக் கண்டு மகிழ்ச்சியை அனுபவித்த முதல் கிறிஸ்மஸ் கூட்டம் யாரென்றால், கன்னிப் பெண்ணாக இருந்தும் கருத்தரித்து, தனது பிரசவத்தை வீதியோரத்திலே காணும் அவமானத்தை அனுபவித்த கன்னி மரியாள். அவரது அங்கலாய்ப்புக்கள் அனைத்தையும் சுமந்து நின்ற அவருடைய கணவர் சூசையப்பர். வானமே எங்கள் கூரை என்று வெட்டவெளியில் கிடந்த ஏழை இடையர்கள். ஆம், தமது அன்றாட வாழ்க்கை நிலையை, அவலங்களை ஏற்ற பொழுதுதான் அவர்களுக்கு அங்கே இயேசு பிறந்தார். மகிழ்வைக் கொடுத்தார். நாது அன்றாட அனுபவங்களை இறையனுபவமாக ஏற்கும் பொழுதுதான் நாமும் இறைவன் தரும் மகிழ்ச்சியை அனுபவிக்கின்றோம். நமது உள்ளத்தில் இயேசு பிறக்கின்றார். "கடவுள் நம்மோடு" இருக்கிறார். அர்த்தத்தைக் கொடுத்து வழி நடத்துகிறார்.

## கிறிஸ்மஸ் ஒரு பயணம்

எமது அன்றாட வாழ்விலே இறைவனின் பிரசன்னத்தை உணர்ந்து, அவரது வழிநடத்தலில் நிறைவையும் மகிழ்ச்சியையும் அனுபவித்து, அதைப் பிறருடன் பகிர்ந்து வாழ்வதே கிறிஸ்மஸ்சின் அழைப்பு. கிறிஸ்மஸ் மகிழ்ச்சி.

வாழ்வுச்சூழல் நாம் எதிர்பார்ப்பது போன்று என்றுமே சுமுகமாயிருப்பதில்லை. மரியாள், சூசையப்பர், இடையர்களின் வாழ்வு போன்று நெருக்கீடுகள், முரண்பாடுகள், சவால்கள் நிறைந்தவை. இச் சூழ்நிலைகளில் மனித அவநம்பிக்கையிலிருந்து இறை நம்பிக்கைக்கு பயணிக்கும் ஒவ்வொரு முறையும் எமது வாழ்வில் கிறிஸ்மஸ் இடம்பெறுகிறது. மனிதன் தனது அவநம்பிக்கையின் அடித்தளத்திற்கு செல்லும்போதுதான் இறைவன் வந்து நம்மைக் கைதூக்குகின்றார். ஏனென்றால், இறைவன்தாமே நம்மைக் கைதூக்கினார் என்பதை நாம் உள்ளூர உணர வேண்டும் என்பதற்காக.

## "எருசலேம் – ஜெருஷலோம்" சமாதானத்தின் நகரம்

பெத்லேகெமில் இயேசுவுடன் ஆரம்பிக்கும் பயணம் சமாதானத்தின் நகரம் எனப்படும் ஜெருசலேம் வரை செல்லும் போதுதான் இச்சமாதானம் நடைமுறை வாழ்வில் நாமனுபவிக்கும் சமாதானமாக, முதிர்ச்சி பெற்ற சமாதானமாக, தியாகம் எனும் மரத்தில் மலரும் சமாதானமாக அமையும். இயேசு தனது பாடுகள், மரணம், உயிர்ப்பின் மூலமாகத்தான் அதாவது தன்னையே முழுமையாகப் பலியாக்கியதன் மூலம்தான் எமக்கு முழுமையான சமாதானத்தை, புதுவாழ்வைப் பெற்றுத்தந்தார்.

பணம், பொருளைவிட மனிதனை நமது உள்ளத்தின் அடி ஆழத்தில் பெரிதாக மதிக்கும் போது, அண்ணாந்து பார்க்க நாம் ஆசைப்படும் இறைவன், "கடவுள் நம்மோடு" (இம்மானுவேல்) என்று உறுதியாய் உணரும் போது, "அவர் செல்வமிக்கவராய் இருந்தும்... உங்களுக்காக ஏழையானார்" (2 கொரி 8:9) என்பதை உணரும் போது, நம்பிக்கை என்னும் விளக்கு தள்ளாடியில் அணைந்துபோகும் வேளைகளில் நமது இரவை ஒளிர்விக்கும் சுடர்விளக்காக இயேசு வருகிறார். பாலன் குடிலின்முன் கண்ணீர் சொரியும் எமது கண்கள் குடிசையிலுள்ள ஏழைகள், நோயுற்றோரையும், முகாம்களில் முடக்கப்பட்டோரையும் கண்டு நெஞ்சம் நெகிழும்போது, அங்குள்ள குடிசைகளின் குட்டையான வாசல்களினூடாக தலைகுனிந்து செல்லும்போது, ஏதிலிகளாய் ஆக்கப்பட்ட மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களோடு எமக்குள்ளதைப் பகிர்ந்து கொடுத்து வாழும்போது, மற்றவர்களோடு நாம் கொண்டுள்ள அன்பும் உறவும் கபடற்ற, தூய்மையான, தியாகம் நிறைந்த அன்பாக மலரும்போது, வளரும்போது, இயேசு நமது உள்ளங்களில் பிறக்கிறார் - நமக்கு இதுவே கிறிஸ்துமஸ்.

## ஒரு தாயின் திறந்த மடல்

என்றும் என் அன்பு மாறாத செல்வங்கள் அறிவது! கிறிஸ்து பிறப்பு விழா நெருங்கிவிட்டது. மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. என்னென்ன ஆயத்தங்கள் எல்லாம் செய்ய வேண்டும். நினைக்கும் போது எனது கடந்த கால வாழ்வு நினைவுக்கு வருகின்றது. கூட கண்ணீரும் மடல் மேல் வந்து விழுகின்றது.

கடந்த காலங்களில் உங்களுடன் நான் கழித்த ஒவ்வொரு வருடங்களையும் நினைத்துப் பார்க்கிறேன். அப்போது நீங்கள் இளம் பராயத்தில் எனது அன்புப் பராமரிப்பில் குடும்பம் என்ற பிணைப்புக்குள் நான் உங்களை எனது கண்ணின் மணிபோலப் பார்த்து வந்தேன். கிறிஸ்மஸ் விழா வருகின்றது என்றால் உணவு, உடை, அலங்காரங்கள், சிற்றுண்டிகள், கைவிசேடம் என்று எல்லாவற்றையும் நினைத்து நினைத்து அனைத்தையும் உங்களுக்காக, உங்களுக்குப் பிடித்த வகையில் எல்லாவற்றையும் செய்து உங்களிடம் பாராட்டுக்களையும் அன்பான முத்தங்களையும் பெற்று மகிழ்ச்சியாக கிறிஸ்துவின் பிறப்பை வரவேற்க காத்திருப்போம்.

பிற்பட்ட காலங்களில் நீங்கள் ஒவ்வொருவராகத் திருமணம் செய்து உங்கள் பிள்ளைகளை எமது கரங்களில் தந்த போது பாட்டி என்ற எனது அன்புப் பராமரிப்பிலும் அரவணைப்பிலும் அவர்கள் அனைவரும் வளரவும் எனக்கும் தள்ளாத நிலை ஏற்படவும் சரியாகிவிட்டது. எவ்வளவு காலமும் அம்மாவின், பாட்டியின் உதவி தேவைப்பட்ட நிலையில் என்னை உங்களுடன் ஒரு பயணம் கொடாத வேலைக்காரியாக வைத்திருந்து விட்டு தள்ளாமையும், வயோதிபத்தன்மையும் உங்களுக்கு சுமையாகவும், சில வேளை அவமானமாகவும் இருந்துவிட என்னை வீட்டின் கொல்லைப் புறத்துக்குத் தள்ளிவிட்டது. பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தின் நியதி அல்லவா? ஆனால் இது பெற்ற தாய் தந்தைக்குமா பொருந்தும்? என்னவோ அதன் பின்பு கொல்லைப் புறத்தில் நான் கழித்த இரண்டு கிறிஸ்து பிறப்பு விழாவும் எனக்கு பாலகன் கிறிஸ்து மாட்டுத் தொழுவத்தில் பிறந்ததையும், சிறுமையில் அமைப்பட்டதையும் அனுபவ வாயிலாக அனுபவித்து தெரிந்து ஒரு விழிப்புணர்வை பெற வைத்தது என்பது மட்டும் உண்மை. நான் என்ன தவறு செய்தேன்.

**உன்னைத் தாலாட்டுவதற்காக நான் உறங்காமல் இருக்கவில்லையா?**
**உனக்கு உணவூட்ட நான் உண்ணாமல் இருக்கவில்லையா??**
**உன்னை அழகுபடுத்த என்னை இழிவாக்கவில்லையா???**
**உனக்கு வாழ்வளிக்க என் வாழ்வையே அழிக்கவில்லையா????**

அன்புச் செல்வங்களே நீங்கள் என்னை ஒதுக்கி விட்டாலும் என்னால் உங்களை மறக்கவோ, ஒதுக்கவோ முடியாது. பணத்தையோ, செல்வங்களையோ பதவிகளையோ இறைவன் எமக்குத் தருவது நாம் அதனை சிறந்த முறையில் பயன்படுத்தவும் உரியவர்களிற்கு உகந்த வேளையில் உதவிகள் செய்ய வேண்டும் என்பதற்காகவே.

தேடு, தேடு, மெசியாவைத் தேடு எங்கே தேடுவாய் ஆலயத்தில் உள்ள மாட்டுக் கொட்டிலிலா??? அல்லது நீ சோடித்து அழகுபார்க்கும் கிறிஸ்மஸ் குடிலிலா?? பார், பார், உன் வீட்டின் கொல்லைப்புறத்தில் பார் முதியோர் வதியும் இல்லத்தில் பார், அகதி முகாம்களைப் பார், அனாதை இல்லங்களைப் பார், அங்கே தான் நீ சந்திக்கவுள்ள மெசியாவை முழுமையாகக் காண்பாய்.

இப்படிக்கு
வயோதிப மடத்திலிருந்து
என்றும் அன்புள்ள அம்மா

சுகந்தி இரட்ணகுமார்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## "இவர்களில் இறைவனைக் காண்பாயா?"

"வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார்" என்பதற்கு அமைவாக கிறிஸ்தவர்கள் என்றும் அவரது நாமத்தை அடையாளப் போர்த்துக் கொண்ட நாம், கிறிஸ்து விட்டுச் சென்ற அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறோமா? அன்று கிறிஸ்து சமூகத்தில் வாழ்ந்த போது யாரைத் தேடி நாடிச் சென்றார் என்பதை வேதாகமம் கூறி நிற்கின்றது. இன்று கிறிஸ்து இவ்வுலகில் நடமாடும் தெய்வமாக இருப்பாரெனில், அவர் யாரிடம் செல்வார் என்பதும் எமக்குத் தெரியாததொன்றல்ல. இருந்தாலும் எம்மிடமுள்ள சில விட்டுக் கொடுப்புக்களை எம்மால் செய்ய இயலாமல் இருப்பது வருந்தத்தக்கது.


இன்று எம் நாட்டின் சுற்றுப்புறங்களின் நிலைப்பாடுகளை நோக்கிடினும் மக்கள் ஒவ்வொருவரினதும் அவலங்கள் எண்ணிலடங்காதவை. கடந்த கால வன்செயல்கள் மக்களிடையே பல வடுக்களை ஏற்படுத்தியுள்ளன. அவற்றிலிருந்து மீட்சி பெறமுடியாது தினம் தினம் தவித்துக் கொண்டிருக்கின்றான் மனிதன். பல்லாண்டுகாலமாக முகாம்களில் அடைக்கப்பட்டு பசி, பட்டினி, சாவு, நோய்களுக்கு உட்படுத்தப்பட்டு ஆறாத் துயரில் அல்லலுற்றான்.

இவ்வாறான கொடூரங்களுக்கு மத்தியில் தான் கிறிஸ்து பிறப்பு விழா அண்மித்து நிற்கின்றது. எவ்வாறாக அந்நாளை நாம் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றோம்? எமது ஆடம்பரம், அலங்காரம், கொண்டாட்டம், தும்மாளம், குடி, வெடி, அடிதடி இவைகளை வென்றெடுக்கும் கிறிஸ்மஸ்ஸா? சிந்திப்போம்? நான் எனது குடும்பம் என்ற சிறிய வட்டத்தை விட்டகன்று வெளியே சற்று நோக்குவோம். முன்னைய காலங்களில் நாம் கொண்டாடி மகிழ்ந்த கிறிஸ்து பிறப்பு விழா சமகாலத்தில் வேறொரு நிலையை எமக்கு எடுத்துக் கூறுகின்றது.

எனவே, ஆடை அணிகலங்களால், எம்மை சிங்காரிப்பதைத் தவிர்த்து, அன்பினால் பகிர்வினால் எம்மை மற்றவர்க்காகத் தியாகம் செய்ய முன்வருவோம். கவலைப்படுவோரின் கண்ணீர் துடைக்கும் கரங்களாக மாறுவோம். அவதிப்படுவோருக்கு ஆறுதல் கூறுவோம். ஏழ்மையும், பணிவுமான பாலக இயேசுவின் பிறப்பு நாம் செய்யப் போகும் பரித்தியாகச் செயல்களுக்கு வழிகாட்டலாக அமைய முயற்சிப்போம். நொந்து வெந்தவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதன் மூலம் ஒளிமயமான கிறிஸ்து பிறப்பு விழாவை அர்த்தத்துடன் கொண்டாட முன்வருவோமாக!

செல்வி. தவம் குருகுலத்து, நவாலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இது
சகாரா பாலைவனத்தின்
ஒட்டக பயணிகளில்
கூடாரமல்ல
உயிர் பிச்சைக்காய்
ஓடியவர்களில்
கிழிந்த வீடுகள்



ஊமையாகிப்போன
சர்வதேசத்தின்
மனச்சாட்சிகளுக்கு
இந்த வானமே
சாட்சி




காட்டு மரங்களுடே
மனிதர்கள்...
வேட்டையாட வந்தவர்கள்
அல்ல
வேட்டையாடப்பட்டவர்கள்


# பதிவுகளின் உயிர் நினைவுகள்...



கஞ்சி கொட்டிலில்
பிஞ்சுகளின்
காத்திருப்பு...
இன்று போய் கஞ்சிக்கு
நாளை வாருங்கள்




உலகம் ஆயிரம் சொன்னாலும்
ஆண்டவன் பணிக்காய்
முகிழும் விழுதுகளால்
மகிழும் இந்த
பூமி





அம்மா
இத்துடன் நிறுத்திக்கொள்
நாளையும்
அழவேண்டியிருக்கும்
உன்
எஞ்சியவர்களுக்காக




மகிழ்ந்திடாய் மானிலமே
உந்தன் மைந்தனின் மாட்சியிலே...
இன்று பேரருள் பாய்ந்தது
குருத்துவத்தால் என்று
புகழ்ந்திடாய் திருமறையை



மூட்டைப்பூச்சி என்று
வைத்த நெருப்பில்
வீடே எரிந்துபோனதே



பாதை திறந்ததால்
வாதை குறைந்ததால்
போதை நிறைந்ததால்
பொழுதெல்லாம் இப்படி
கழிதல் வேண்டாம்



வாடைக் காற்றிற்கு
வந்து ஒதுங்கியதோ
தோல் போர்த்த
மரக்கிளையொன்று?

அருட்செல்வன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்து பிறப்பு விழா... (3ம் பக்கத் தொடர்ச்சி)

போலக்கடைப்பிடிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது ஒரு 3 வாரகால உபவாச,செபக்காலமாக இருந்தது. பின் இது 40 நாட்களுக்குத் தவக்காலம் போல நீடிக்கப்பட்டது இக்காலத்தில் திங்கள், புதன், வெள்ளிகளில் உபவாசம் அனுசரிக்கப்பட்டது. இக்காலம் நவம்பர் 11ᵉ திகதி ஆரம்பமானதால் புனித மாட்டீனாரின் தவக்காலம் என்றும் அழைக்கப்பட்டது. ஆரம்பத்தில் இக்காலத்தில வழிபாட்டிலும் பார்க்க தவமுயற்சிகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

6ᵉ-7ᵉ நூற்றாண்டுகளில் பிரான்ஸ் மற்றும் வடமேற்கு இத்தாலிப்பகுதியிலிருந்த திருவழிபாட்டு வாசக நூல்கள் 6 வாரகால ஆயத்தகாலத்திற்கேற்ப அமைந்திருந்தன. ஆனால் ஸ்பானியா, வடகிழக்கு மற்றும் தெற்கு இத்தாலிப்பகுதியில் 5 வாரகால ஆயத்த காலம் நடைமுறையிலிருந்ததைக் காணக்கூடியதாயுள்ளது. இறுதியில் ரோமாபுரியில் 5 வாரகால ஆயத்தகாலம் 4 வாரகாலமாக மாற்றப்பட்டது. இம் மாற்றத்தைப் பாப்பரசர் 1ம் கிறகோரி யார்(590-604) கொண்டுவந்தார். இதிலிருந்து இம்முறை மேற்கத்தைய முழுவதும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆரம்பத்தில் பிரான்சில் இருந்ததைப் போல அன்றித் மேறது ரோமையில் நிலமை வித்தியாசமாகவிருந்தது. ரோமையில் திருக்காட்சி விழா திருமுழுக்கு கொடுக்கப்படும் விழாவாகக் கொண்டாடப்படவில்லை. திருவருகைக் காலம் ரோமையில் அறிமுகமான போது அது கிறிஸ்துவின் பிறப்புக்குத்தான் ஆயத்த நாட்களாக விருந்தது திருக்காட்சிக்கு அல்ல. அத்துடன் அக்காலம் ஒரு சிறப்பு வழிபாட்டுக்காலமாயிருந்ததே தவிர தவமுயற்சிகளின் காலமாயிருக்கவில்லை. எனினும் பிரெஞ்சு செல்வாக்கின் காரணமாகவே அக்கால வழிபாட்டில் கிறிஸ்துவின் 2ᵉ வருகை தொடர்பான செபங்கள் சேர்க்கப்பட்டன 10ᵉ நூற்றாண்டில் தான் ரோமை, பிரெஞ்சு திருவருகைக்கால அம்சங்கள் ஒன்றிணைய இப்போது நாம் கொண்டுள்ள சிறப்பான திருவருகைக்கான வழிபாடு உருவானது.

திருவருகைக்காலம் மூன்று மறையுண்மைகளைத்தன்னகத்தே கொண்டுள்ளது. முதலில் இது கிறிஸ்துவின் முதல் வருகையின் கொண்டாட்டம், இரண்டாவதாக திருச்சபையில் அவரது பிரசன்னம், மூன்றாவதாக மீட்புத்திட்டத்தை நிறைவு செய்யும் அவரது இரண்டாவதும் இறுதியுமான வருகையுமாகும். எனவே திருவருகை என்பது அதன் நிறைவான கருத்துடன் நோக்கப்படுவதாயின் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால அம்சங்கள் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். புனித பேர்னாட்(1090-1153) வாழ்ந்த காலத்திலிருந்து கிறிஸ்தவ ஆன்மீகம் திருவருகைக் காலத்தை மேற்குறிப்பிட்ட அணுகுமுறையில் நோக்கப்பட்டு வந்துள்ளது. ஏனெனில் கிறிஸ்துவின் முதலாவதும் இரண்டாவதும் வருகைகளுக்கிடைப்பட்ட தற்காலத்தில் அவர் அருளுடன் வரும் வருகை இடம் பெற்று வருகின்றது.

### கிறிஸ்து பிறப்பு விழாத்திருப்பலிகள்

கிறிஸ்மஸ் விழாவில் 3 திருப்பலிகள் - நள்ளிரவில், அதிகாலையில், காலையில் ஒப்புக்கொடுக்கப்படும் ஒரு பாரம்பரியம் உண்டு. அவ்வழிபாட்டு ஒழுங்கு துவங்கியது ரோமையில் பாப்பரசருக்கு மட்டும் என்று 6ᵉ நூற்றாண்டின் பிற்பகுதியில் துவங்கிய ஒரு வழிமுறையாகும். 5ᵉ நூற்றாண்டில் ஒரு திருப்பலி மட்டும் புனித பேதுருவின் பேராலயத்தில் (Basilica) பாப்பரசரால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. 6ᵉ நூற்றாண்டில் பெத்லேகேமில் யேசு பிறந்த குடிலின் பாகங்கள் ரோமாபுரியிலுள்ள புனித மரியாளின் பேராலயத்திற்கு(Basilica of Santa Maria Maggiore) க் கொண்டுவரப்பட்டு அங்கும் பெத்லெகேம் பாலன் குடில் போல் ஒரு குடில் அமைக்கப்பட்டது. அத்துடன் பாலன் குடில் முன்பாகத் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் பெத்லெகேமிலுள்ள நடைமுறைப்படி இந்த ஆலயத்தில் நள்ளிரவுத்திருப்பலி பாப்பரசரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இரண்டாம் திருப்பலி அதி காலையில் டிசம்பர் 25ᵉ திகதியில் நினைவு கூறப்பட்டுவந்த மறை சாட்சியாகிய கிழக்கத்தைய திருச்சபையைச் சேர்ந்த புனித அனஸ்தாசியாவின் நினைவாக அவருக்கு நேர்ந்தளிக்கப்பட்ட பேராலயத்தில் (Basilica) பாப்பரசரால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. காலப்போக்கில் ரோமாபுரியில் கிழக்கின் செல்வாக்குக் குறையவே இத்திருப்பலி கிறிஸ்து பிறப்புத்திருப்பலியாகவே ஒப்புக்கொடுக்கப்பட்டது. 3ʳᵈ திருப்பலி முன்னர் துவங்கி புனித பேதுரு பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு வந்த பெருவிழாத் திருப்பலியாகும்.

பின்னர் குருக்களும் கிறிஸ்மஸ் தினத்தில் மூன்று திருப்பலிகள் ஒப்புக்கொடுப்பது என்ற ஒழுங்குமுறை உலகெங்கும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. நமது நாட்டிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இதுபற்றி ஒரு சிறப்பான வரலாற்றுக்குறிப்பு உள்ளது. யாழ் குடா நாட்டில் முத்.யோசவ்வாஸ் அடிகள் திருப்பலி ஒப்புக்கொடுக்க ஏற்பாடாகி இருந்தமையும் பின்னர் டச்சுக்காரர் வாஸ் அடிகளாரைப் பிடிப்பதற்கு மூன்று படையணிகளாகப்பிரிந்து சென்றமையும் வாஸ் அடிகள் அவர்கள் கண்களில் படாது தப்பிச்சென்றமையும் வரலாற்று உண்மைகள்.

## பருத்தித்துறை மத்தியஸ்த சபை உறுப்பினராக அருட் தந்தை ம. பத்திநாதர் நியமனம்



1988ம் ஆண்டின் 72ம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் 3(1)ஆம் பிரிவினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இலங்கை மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பருத்தித்துறை மத்தியஸ்த சபைகள் பிரதேசத்திற்கான இல 249/27 மத்தியஸ்த சபையின் உறுப்பினராக அருட்தந்தை மயத்திநாதர் அவர்களை நியமித்துள்ளது இவருக்குரிய நியமனத்தை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.மு. அரிய நாயகம் அவர்கள் வழங்கியுள்ளார். இச்சபையில் மொத்தம் 17 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சபையானது தற்போது பருத்தித்துறை பிரதேச பிரிவின் கீழ் இயங்கி வருகின்றது மத்தியஸ்த சபையின் முக்கிய நோக்கம் மக்களின் சிறிய பிணக்குகள், முரண்பாடுகளை நீதிமன்றம் சென்று பணத்தை நேரத்தை விரயமாக்காது அமைதியான முறையில் கலந்துரையாடி சமரசமுறையில் பிணக்குகளை தீர்த்துக் கொள்வதாகும். இச்சபையின் மூலமாக பலர் நன்மையடைந்து வருகின்றார்கள்.

## இலங்கை ஆயர் மன்று விடுக்கும் கிறிஸ்மஸ் செய்தி 2009

இயேசுவின் பிறப்பு விழாவை இன்னொரு முறை கொண்டாட ஆயத்தமாகிக்கொண்டிருக்கும் இந் நாளில் அமைதியின் மன்னனாகிய இயேசு ஆண்டவரால் அமைதி என்பது நல்லுள்ளம் கொண்ட மனிதர்க்கு மட்டுமே உரியது எனும் அமைதி, இறைவன் என்ற பேர் உண்மையையும் ஞாபகப்படுத்தப்படுகின்றது. இக்காலமானது எமது ஆத்ம பரிசோதனைக்கும் நாம் நல்லனம், புரிந்து கொள்ளும் தன்மையும் ஒன்று பட்ட தேச உணர்வும் கொண்டவர்கள் என்பதை பகுத்தறியும் காலமாகவும் உள்ளது.

முப்பது வருட காலநீண்ட யுத்தத்தில் துப்பாக்கிகள் அமைதியாய்ப் போயுள்ள சூழலில் இவ்வருடம் கிறிஸ்துபிறப்பு விழாவை கொண்டாட ஆயத்தமாகின்றோம். எம்மை பீடித்திருந்த யுத்தம் எம் நாட்டிலிருந்து ஒழிந்தது என்பதில் நாம் நன்றியுடையவர்களாய் இருப்பதற்கு காரணங்கள் நிறையவே உண்டு. இருந்தபோதிலும் இந்த நாட்டு மக்களின் ஒரு சாராரின் பிரச்சனைகள் தீர்க்கப்படா வேண்டிய நிலையிலேயே இன்னமும் உள்ளது. அமைதியும், மக்களின் ஐக்கியமும் உறுதிப்படுத்தப்பட்டு, உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் முற்றிலும் மீளக் குடியமர்த்தப்பட்டு வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்பி மக்கள் தம் தொழிற்துறைக்கு சென்று ஜீவனோபாயத்துக்காக உழைக்க வழிசெய்யப்படல் அவசியம்.

வாழ்க்கை செலவின் உயர்வின் தாங்க முடியாத சுமையாக மக்களை அதுவும் வறிய மக்களை பாதித்துள்ள நிலையில், மக்களின் ஏமாற்றத்தைப் போக்க அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். நீடித்த சமாதானம் இந்த நாட்டில் ஏற்பட வேண்டுமானால் நிலைத்து நிற்கக்கூடிய நீதியான தீர்வுகளை வழிவகைகளை கண்டடைய வேண்டியது மிகவும் அவசியமானதாகும். ஜனநாயகத்தின் உயிர் ஓட்டமான நீதியும், சுதந்திரமான தேர்தல்கள் இந்நாட்டிற்கு மிகவும் தேவையானதொன்றாகும். இத் தேசத்தின் ஒரு பகுதி மக்களின் ஒரு தொகை உயிரை காவு கொண்டதும், தேசத்தின் வளங்களை அழித்ததுமான பிரச்சனைகள் தொடர்பாக நாம் விழிப்படைந்துள்ளோம்.

ஆகவே எம் விசுவாசத்தில் நிலைத்து நின்று கிறிஸ்து பிறப்பு விழாவை எதிர்நோக்கும் எம் மக்கள் நாம் வாழும் எம் நாட்டிற்கு முன்னுரிமை கொடுத்து தேசிய ஒருமைப்பாட்டிற்கும், இணக்கப்பாட்டுக்குமாக தங்களை அர்ப்பணிக்க அழைப்பு விடுக்கின்றோம்.

கிறிஸ்து பிறப்பு விழாவை நினைவுகூறும் இந்நாட்களில் பொது நிலையினர், குருக்கள், கன்னியர்களுக்கு, சமாதானம் நிறைந்த கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்களை இயம்பி நிற்கின்றோம்.

## தூய மரியன்னை பேராலயத்தில் "STAINED GLASS" ஓவியம்



இலங்கைத் தீவின் மிகப் பெரிய ஆலயமாக விளங்கும் யாழ் மறை மாவட்ட தூய மரியன்னை பேராலயத்தின் அழகை மேலும் மெருகூட்ட ஆலயத்தின் திருப்பீடத்துக்குப் பின்னால் சிலுவை ஆண்டவரின் இரு மருங்கிலும் "STAINED GLASS" வர்ண ஓவியக் கண்ணாடி ஸ்தாபிக்கப்பட்டு இம்மாதம் 8ம் திகதி தூய மரியன்னையின் அமல உற்பவத் திருநாள் அன்று ஒப்புக் கொடுக்கப்பட்ட கூட்டுத்திருப்பலிக்கு முன் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் ஆசீர்வதித்து திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

யாழ் ஆயர் தலைமையில் இடம்பெற்ற இத்திருப்பலியில் பல அருட்தந்தையர்களும் கூட்டுத்திருப்பலியில் பங்கெடுத்தனர். யாழ் ஆயரின் அபிஷேக வெள்ளிவிழா, பேராலய அபிஷேக வெள்ளி விழா ஞாபகமாக தூய மரியன்னையின் விண்ணேற்பு ஓவியமும், முன்னாள் ஆயர் அமரர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் ஞாபகமாக இறைமகன் இயேசுவின் உத்தான ஓவியமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 15 அடி உயரமான இவ் ஓவியங்கள் பல வர்ணக் கண்ணாடிகளில் தீட்டப்பட்டுள்ளமை மிக அழகாக காட்சி தருகின்றது.

ஐரோப்பிய நாடுகளின் ஆலயங்களில் இவ்வாறான ஓவியங்களைக் காணக் கூடியதாக இருந்தாலும் யாழ் மறைமாவட்டத்தில் இவ்வாறான ஓவியம் பேராலயத்திலேயே முதன் முதலாக நிறுவப்பட்டுள்ளது. இக்கண்ணாடிகள் ஊடாக சூரிய ஒளி உட்புகும் போது ஓவியங்கள் அழகாக காட்சியளிப்பதோடு பார்ப்போரை பரவசப்படுத்தி ஒரு ஆன்மீக உணர்வையும் ஏற்படுத்த வல்லது. ஆயர் அவர்களின் பெரும் முயற்சியினால் அமரின் பங்களிப்போடு பெரும் பொருட் செலவில் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட இவ் ஓவியங்கள் பல தொழிலாளர்களின் முயற்சியோடு மிக அவதானமாக பொருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த ஓவியங்கள் பேராலயத்துக்கு வரும் பக்தர்களின் கண்களை ஈர்த்து ஆன்மீக உணர்வை தூண்டி உள்ளங்களை இறைவன் பால் உயர்த்தும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.



| | |
|---|---|
| மார்கழி 27 2009 | திருக்குடும்ப பெருவிழா |
| ஜனவரி 1 2010 | அன்னை மரியாள் இறைவனின் தாய் பெருவிழா |
| ஜனவரி 3 2010 | ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா |
| ஜனவரி 10 2010 | ஆண்டவரின் திருமுழுக்கு பெருவிழா |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலின் விமலனே விரைந்து வருவாய்...

அன்று எகிப்திய மன்னன் பாரவோனின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ராயேல் மக்களை விடுவிக்க இறைவன் திருவுளம் கொண்டு பல்வேறு வல்ல செயல்களின் மூலம் மோசேயின் உதவியுடன் அப்பணியினை நிறைவேற்றினார்.

ஆதிப்பெற்றோர் செய்த பாவத்தின் விளைவாக இருளினில் மூழ்கியிருந்த மனுக்குலத்தினை மீட்பதற்காக இறைவன் தாம் வாக்களித்ததன்படியே தம் ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு அனுப்பி சிலுவை மரணத்தினை வெற்றி கொண்டதன் மூலம் எமக்கு மீட்பினைப் பெற்றுத்தந்தார்.

திமிர்வாதக்காரனை குணப்படுத்திய இயேசு, அவனை நோக்கி "மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. எழுந்து உன் படுக்கையைத் தூக்கிக் கொண்டு சமாதானமாகப் போ" என்று கூறிய நிகழ்வின் மூலமும், பல ஆண்டுகளாகப் பெரும்பாட்டு நோயினால் பாதிக்கப்பட்ட பெண் விசுவாசம் கொண்டு இயேசுவினுடைய போர்வையின் விளிம்பினைத் தொட்டதினாலேயே தம்மிடமிருந்து வல்லமை வெளியேறி அவள் குணமடைந்தாள் என்பதனை அறிந்த இயேசு "என்னைத் தொட்டவர் யார்?" என்று கேட்டு அவளது விடுதலையை மற்றவர்களிற்கு உணர்த்தும் பொருட்டு "மகனே உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கியது சமாதானமாகப் போ" என்று கூறிய நிகழ்வின் மூலமும் இயேசு பாவங்களிலிருந்தும் நோய் துன்பங்களிலிருந்தும் விடுதலை அளிக்க வந்த விடியலின் வெற்றி வீரன் என்று நாம் முழுமையாக உணர்ந்து கொள்கின்றோம் என்று கூறினால் அது மிகையாகாது.

இன்று இயற்கையின் அழிவுகள், போர் ஏற்படுத்திய உயிரிழப்புக்கள், அநியாயப் படுகொலைகள், ஆட்கடத்தல்கள் எத்தனை எத்தனை? அங்கவீனமுற்றோர், அனாதைகளாக்கப்பட்டோர் அனைவரையும் மீட்பதற்காக விடியலின் விமலனே நீர் மீண்டும் ஒரு முறை எம்மத்தியிலே எழுந்திடுவீர்! எம் உறவுகளின் துயரம் நீங்க விரைந்திடுவீர்!

இவை ஒரு புறமிருக்க கடவுளை மறந்து சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்போரையும், குடிபோதைக்கும் போதைவஸ்த்துக்களிற்கும் அடிமைப்பட்டிருப்போரையும், கணனியிலும், கையடக்கத் தொலைபேசிகளிலும் தம் வாழ்வினைத் தொலைத்துவிட்டோரையும் மீட்பதற்காக மன்னவனே விரைந்திடுவாய். எம் மாந்தர்களின் மாண்பினைக் காத்திடுவாய்.

திருமதி. சித்திரா தேவதாசன்
23, சுவாட்ஸ்லேன்

# தேடி வரும் தேவா! உன் தெய்வமனம் தாராய்!

MAY PEACE BE WITH YOU AT Christmas

ஓடி வரும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்ட
தேடிவரும் தேவா! உன் தெய்வமனம் தாராய்!
சுவடி நின்று அமைப்புக்கள் பிரிவுற்றதை நிறுத்தி
வாடி நிற்கும் மக்களுக்காய் வாழ வரம் தாராய்!

எறிகணையால் ஊனமுற்றோர் ஏதிலிகள் அநாதைகள்
மறுவாழ்வு பெற்றுய்ய வழிகாட்ட வாராய்!
கொடும் போரால் மனநலத்தை இழந்தவர்களுக்கு மீண்டும்
கொடும் ஐயா மனநலத்தை குழந்தையே தேவா!

வீடிழந்து நாடிழந்து முட்கம்பி வேலிக்குள்
வாடிநிற்கும் உறவுகளை மீளக் குடியமர்த்தும்
செய்யாத தவறுக்காய் சிறையிலே வாடுவோரை
ஐயா! நீ சென்று அழைத்து வர வேண்டும்!

கடத்தல் கப்பம் கொள்ளை இவற்றை எல்லாம்
நடத்தும் கொடியவரைத் தண்டிக்க நீ வாராய்!
யுத்தம் இல்லாத நாடொன்றில் நாம் வாழ
அத்தனே! நீ வந்து வழிகாட்ட வேண்டும்!

இனமத குல பேதம் இல்லாத ஒரு நாடாய்
எம் நாடு ஒன்றுபட உன் ஆசி நீ பொழிவாய்!
ஆட்சியாளரின் செங்கோலை உன்கையில்
தாங்கி எம்மை நீ ஆளவா! திருப்பாலா!

"நவாலியூர் நாயகி" ...A SAVIOUR HAS BEEN BORN TO YOU...

# புதிய விடியலுக்கு வா!

வானிற்கு ஆடை சூடிய பின் என் கூரையின்
வாய்பிழந்த கிளிசல்களால்
வான் மழையும், பனியும்
வன் முறைசூடி ஆக்கிரமிப்புச் செய்யும் போது
வானவன் உன்னை எப்படி நான்
வா என்றழைப்பது

பல்குழலால் பாழாகிப் போன காதும்
'கண்' துவக்கால் குருடாகிப்போன கண்ணும்
மிதிவெடியால் முடமாகிப்போன அடியும்
முகாமிற்குள் என் முகவரியாய்
முத்திரையிடப்பட்ட பின்னர் - பாலகனே
ஆவின் தொழுவத்தில் பிறந்தாலும் - இந்த
அகதியின் தொழுவத்தில் பிறந்துவிடாதே!

கூண்டுக்குள்ளே அடைக்கப்பட்டு
குண்டு மழை பொழியப்பட்டு
அகதி முகாம்களில் அந்தரிக்கும் எமக்கு
பாலகனாய்ப் பிறப்பதே நின் சித்தமென்றால்
இந்த அகதியின் தொழுவத்தில் அல்ல - என்
இதயக் கூட்டில் மட்டும் பிறந்துவிடு
புதிய விடியல் ஒன்றைத் தந்துவிடு.

R.S. றொஷான் (தமிழ்த்தாசன்)
கிளரீசியன் துறவற குடும்பம்
சுண்டிக்குழி.

# ஒரு தடவை வரமாட்டாயோ?



சறா!
நம்பமுடியவில்லையே!
உனது எடுப்பான, துடிப்பான
வேகமான, விவேகமான,
அறிவான, அனுபவமான
வாழ்விற்கு இத்தனைதான் ஆயுளா?
உனது அன்பிற்கு, பாசத்திற்கு,
நேசத்திற்கு, தியாகத்திற்கு,
உறவுக்கு, உணர்விற்கு, உதவிக்கு
இத்தனை ஆண்டுகள் தான்
இறைவன் சித்தமோ?

சறாக்குட்டி!
ஏழைகளின் ஏக்கச் சிலுவைகளை
சுமந்து எடுத்து, தள்ளாடித் தூக்கி
மக்கள் துன்பங்களை சுமந்து
துடைத்தாயே!
உன்னை எப்படி மறக்கமுடியும்!
அனாதைகளை அரவணைத்து - உன்னை
அப்பா என்று குழந்தைகள் அழைக்க
வைத்தாயே! இனி இந்தப்பிஞ்சுகள்
யார் முகத்தைப் பார்க்கும்?

ஒருதடவை இங்கே
வரமாட்டாயோ
உனது செல்லச்சிரிப்பையும்
அழகிய முகத்தையும்
பார்க்க ஒரே ஒரு சந்தர்ப்பம்
தரமாட்டாயோ!!

பாலதாஸ் பிறாயன்




குருப் பணியாளரே பெருமையுடன்
உமை வாழ்த்துகின்றோம்

# மீண்டும் ஒரு தடவை பிறந்துவிடு

ஜிம்பிறவுண்!
உண்மைக்குப் பொருள் சொல்லி
சத்தியத்தை வாழ்வாக்கி
தியாகத்தை துணிவாக்கி.....
பாசத்தை வேராக்கி.....
அன்பை அள்ளி வழங்கி..
எப்போதுமே நேர்மையாய்
வாழ்ந்த உனது வாழ்விற்கு.....
மனிதன் கொடுத்த 'பட்டம்'
"காணாமல் போனார்" என்பது.

ஜிம்பிறவுண்!
எங்கிருந்தாலும் ஒரு தடவை
இங்கே வந்துவிடு..
காரணம் என்ன தெரியுமா?
உனது நேர்மையை
உனது உண்மையை
உனது தியாகத்தை
உனது பாசத்தை
உனது பரிவை
எமது தேசம் சுவைத்திட
மீண்டும் வந்து
ஒரு தடவை பிறந்துவிடு.....

பிறாயன்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org